பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 10 சனிக்கிழமை (26-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:240

### இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

# காணி, வரி, பொலீஸ் அதிகாரங்களை வெட்டி புலிகளுக்கு அரசின் வரைவு!

## ஜனாதிபதிக்கு அனுப்பிய வரைவில் அது பற்றி எதுவும் இல்லை ஏன் இந்த ஒளிப்பு மறைப்பு என்று எதிரணியினர் கேள்வி

கொழும்பு,ஜூலை26

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கும், புலிகளுக்கும் இரு வெவ்வேறு திட்ட வரைவுகளை அரசு சமர்ப்பித்துள்ளது ஏன் இந்த ஒளிப்பு மறைப்பு? - இவ்வாறு சீற்றத்துடன் கேள்வி எழுப்பியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எதிர்க்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட வரைவில் - உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால், புலிகளுக்கு வழங்கிய வரைவில் அந்த அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது பற்றிய வாசகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அதாவது -

புலிகளின் அதிக பங்களிப்போடு இயங்கப்போகும் உத்தேச இடைக்கால அலகில் - புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் அந்த அலகுக்கு- மட்டுப்படுத்தப்படாத அதிகாரங்கள் வழங்கப்படுவதாக, ஜனாதிபதிக்குக் கிடைத்த வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அந்த உத்தேச அலகுக்கு பாதுகாப்பு, பொலீஸ், காணி, வருமானம் (வரி) சம்பந்தமான அதிகாரங்கள் வழங்கப்படவேமாட்டா என்ற மட்டுப்படுத்தல் புலிகளுக்கு வழங்கப்பட்ட ஆவணத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது குறித்தே எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் சீற்றத்தோடு கேள்வி எழுப்பினர்.

அரசு திட்டமிட்டு இத்தகைய குழப்பத்தைச் செய்வதாக அவர்கள் குற்றம் சுமத்தினர்.

ஆனால், ஜனாதிபதிக்கும் புலிகளுக்கும் இடையில் சிறிய மாறுதல்களோடு இருவேறு ஆவணப்பிரதிகள் வழங்கப்பட்டதை ஒப்புக்கொள்ளும் அரசுத் தரப்பு வட்டாரங்கள் அதற்கான காரணத்தையும் உத்தியோகப் பற்றற்ற வகையில் கசிய விட்டுள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

### குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம்:

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுக்குக் கடிதம்

கிண்ணியா, குரங்குபாஞ்சான் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் முகாமை அகற்றும்படி கண்காணிப்புக் குழு விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தமை திட்டவட்டமான யுத்தநிறுத்தமீறல் என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் டரிக்வே டெலிவ்சன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய இந்த முகாமை அகற்றுமாறு கண்காணிப்புக்குழு விடுத்த கோரிக்கையை நிராகரித்து விடுதலைப் புலிகள் கடிதம் ஒன்றை அனுப்பியதை அடுத்தே கண்காணிப்புக்குழுத் தலைவரால் இந்த பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முகாமை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளதை அரசாங்கத்திற்கு கண்காணிப்புக்குழு உத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் ஆலயச் சூழலில் ஒழுங்குபேண இம்முறை இறுக்கமான நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை26

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோர் மீது விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.-நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன்.

எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்துக்கான பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உற்சவ நாள்களில் தொண்டர் அமைப்புக்களும் மாநகரசபை ஊழியர்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு பிரிவினரும் இருபத்துநான்கு மணி நேரமும் வீதிக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

அமைதிக்கும் பக்திச் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக இவ்வருடம் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும்.

களவுகள், சண்டைகள், சச்சரவுகள் ஏற்படும் பட்சத்தில் அதில் மாநகர சபையினர் மற்றும் பாதுகாப்புத் தொண்டர்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

அதேவேளை, பெண்களுடனான சேஷ்டைகள் மற்றும் பாலியல் சேஷ்டைகள், கலாசாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரிடம் ஒப்படைக்கப்படுவர்.

பிரச்சினைகள், குழப்பங்களில் ஈடுபடுவோரை உடனுக்குடன் பிடிப்பதற்கு ஏற்றவகையில் அரசியல் துறையினரால் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்ட தொண்டர்கள் சாதாரண உடைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இளைஞர் குழுக்களினால் ஆலய சுற்றாடலில் மேற்கொள்ளப்படும் சேஷ்டைகளைக் கண்காணிப்பதில் அரசியல்துறையினரும் ஈடுபட்டிருப்பர். அத்துடன், ஏனைய பாதுகாப்பு தொண்டர்கள் மற்றும் பொலீஸார் ஆகியோரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

சேஷ்டைகள் புரியும் இளைஞர் குழுக்கள் மீது அரசியல்துறையினர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர். - இவ்வாறு ஈஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ஐ-4-6)

## சித்த மருத்துவ மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் கைத்தடியில் மேற்கொண்டுவரும் போராட்டம் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவிருப்பதாக சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

சித்தமருத்துவத்துறையை நிறுவனமாக மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனை யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் தனியான பீடமாக வேண்டும் எனக்கோரியும் சித்த மருத்துவ மாணவர்கள் மேற்கொண்டு வரும பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று 18ஆவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

இன்று காலை தங்களின் போராட்டம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் என்று சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று காலை இடம்பெறவிருக்கும் பேரவைக் கூட்டத்தில் பங்குபற்ற வரும் பேரவை உறுப்பினர்களுக்கு தங்களின் கோரிக்கையின் நியாயப்பாட்டை விளக்கும் வகையில் இன்று காலை 9 மணிக்கு மாணவர்கள் அங்கு ஒன்றுகூடவிருக்கின்றனர் என்றும் -

தமது கோரிக்கையின் நியாயப்பாட்டை பேரவை உறுப்பினர்களுக்கு விளக்கி, அதன் மூலம் தமது போராட்டத்துக்கு ஆதரவு திரட்டுவதுடன், கோரிக்கை வெற்றிபெற பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறும் அவர்களிடம் கோரவிருப்பதாகவும் - மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## கனிய வள நிபுணர்கள் மணற்காட்டுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை26

மணற்காட்டுப் பகுதியில் இருந்து மணல் அகழ்வது தொடர்பாக ஆராய்வதற்கு கொழும்பில் இருந்து கனிய வள நிபுணர்கள் இருவர் அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

கனியவளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் அனில் பீரிஸ் மற்றும் புவியியல் ஆராய்ச்சியாளர் உதய டி சில்வா ஆகிய இருவர் கொண்ட குழுவே மணல் அகழ்வு பற்றி ஆராயவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண தமிழ்த்தினப் போட்டிகளில் யாழ்.மாணவர்கள் முன்னணியில்!

யாழ்ப்பாணம்,ஜூலை26

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளில் ஆரம்ப நாளான நேற்று நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி யாழ்.மாவட்டம் 29 இடங்களைப் பெற்று முன்னணியில் உள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஆகிய நான்கு இடங்களில் நேற்றைய போட்டிகள் நடைபெற்றன.

வாசிப்பு, ஆக்கத்திறன், பேச்சு, பாவோதல், இசை (தனி,குழு), நடனம் (தனி,குழு) நாட்டியநாடகம், நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு, முஸ்லிம் நிகழ்ச்சி, சிங்கள நிகழ்ச்சி, வீணை, வயலின், புல்லாங்குழல் ஆகிய போட்டிகள் நேற்று நடைபெற்றன.

ஏனைய போட்டிகள் இன்று இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய முடிவுகளில் யாழ். மாவட்டத்திற்கு 29 இடங்கள் கிடைத்தன. 27 இடங்களைப் பெற்று திருகோணமலை மாவட்டம் இரண்டாம் இடத்திலும், 23 இடங்களைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

நேற்றைய போட்டிகளில் இடங்களைப் பெற்றுக்கொண்ட யாழ். மாவட்ட போட்டியாளர்களின் விவரம் வருமாறு:-

★ மா.நாகவதனி - வாசிப்பு பிரிவு I, இரண்டாம் இடம் (தெல்லிப்பழை துர்க்கா தேவி தொடக்க நிலைப்பள்ளி).

★ ம.கரோலின் சேரா - பேச்சு பிரிவு - I, இரண்டாம் இடம் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

★ சி.கஜேந்தினி - பேச்சு பிரிவு - IV இரண்டாம் இடம் (வட. இந்து மகளிர் கல்லூரி).

★ ம.துளசி பாவோதல் பிரிவு - II, முதலாம் இடம் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி).

★ பே. புஸ்பனா - பாவோதல் பிரிவு - IV, இரண்டாம் இடம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

★ ச.சங்கீதா - இசை (தனி) பிரிவு - II, இரண்டாம் இடம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

★ ர.சுரசாகித்தியன் - இசை (தனி) பிரிவு III, முதலாம் இடம் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் மகன் - பொலீஸார் மோதலில் கான்ஸ்டபிள் காயம்!

### கறுவாக்காடு பகுதியில் சம்பவம்

கொழும்பு,ஜூலை26

அமைச்சர் ஒருவரின் மகனுக்கும் பொலீஸாருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயங்களுடன் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த மோதல் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு கறுவாக்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.


கொழும்பில் உயர் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் அமைச்சரின் மகனும் அவரது சகாக்களும், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலஸாருடன் மோதலில் ஈடுபட்டனர் என்று கறுவாக்காடு பொலீஸார் தெரிவித்தனர்.

ஆபாச வசனங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது அதைத் தடுக்க பொலீஸார் முயற்சித்தபோதே மோதல் ஏற்பட்டது என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அமைச்சரின் மகனுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகக் கறுவாக்காடு பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## வெலிக்கடை படுகொலை சிராத்ததினம்

ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் தமிழ்த் தேசிய வீரர்தினம், வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளின் 20 ஆவது ஆண்டு சிரார்த்த தினம் என்பவற்றை ஒட்டி நேற்று மாலை நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.




நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுகிறார்.



கலந்துகொண்ட பிரமுகர்கள் மௌன அஞ்சலி.....





கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் பிரமுகர்கள்.

# மாகாண தமிழ்த்தினப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

வடக்கு -கிழக்கு மாகாண தமிழ்த தினப் போட்டி முதற்றடவையாக யாழ்.குடாநாட்டில் நடத்தப்படுவதை ஒட்டி போட்டியின் ஆரம்ப நாளான நேற்று குடாநாட்டின் பல பாடசாலை களிலும் தமிழ்மொழியைச் சிறப்பிக் கும் வகையில் பல்வேறு நிகழ்வு கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை பாடசாலைகளில் பிரார்த்தனையைத் தொடர்ந்து இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை சிறப்பிக்கும் பல்வேறு கலை நிகழ்வு கள் இடம்பெற்றன.

சில பாடசாலைகள வாழைகள மற்றும் மாவிலை தோரணம் என்ப வற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாணவர்களும் தமிழ் பாரம்பரியத் தைப் பிரதிபலிக்கும் வகையில் உடை அணிந்து பாடசாலைகளுக்கு சென்ற தையும் காணமுடிந்தது.

அதிபர்கள், ஆசிரியர்களின் விசேட கருத்துரைகளும் சில பாடசாலைக ளில் இடம்பெற்றன.

இதேவேளை, மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல் லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித தியாலயம் ஆகியவற்றில் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

இப்போட்டிகள் இன்றும், நாளை யும் தொடர்ந்து நடைபெறும்.

(ஐ-4-ரி)

## ப.நோ.கூ.சங்க பொதுச்சபை தேர்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பொதுச்சபைத் தேர்தல் ஓகஸ்ட் 9ஆம் திகதி நடை பெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் புதிய பொதுச்சபை தெரிவு செய்யப் படும்.

இதேவேளை -

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆறுபேரும் அடுத்த பொதுச் சபைத் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்றும் -

இது பற்றிய தீர்மானம் பொதுச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப் பதாகவும் - சங்க வட்டாரங்கள் தெரி வித்தன.

(ஐ-17)

## 14 வருடங்களின் பின் ஆலயத்தில் திருப்பலிப் பூஜை

யாழ்ப்பாணம்,ஜூலை26

சுமார் 14 வருடங்களுக்குப் பின் னர், பலாலி தெற்கு புனித சந்தி யோகுமையோர் ஆலயத்தில் நாளை முற்பகல் 11 மணிக்கு திருப்பலி ஒப் புக் கொடுக்கப்படவுள்ளது.

இத்திருப்பலி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளோரை, நாளை காலை 10 மணிக்கு அச்சுவேலி புனித சூசை யப்பர் ஆலயத்தில் ஒன்றுகூடுமாறு திருப்பலி ஏற்பாட்டுக்குழு அறிவித் துள்ளது.

(ஐ-9)

## பிந்துனுவெவவில் 60மி.மீ.குண்டுடன் முஸ்லிம் இளைஞர் கைது!

கொழும்பு,ஜூலை26

பண்டாரவளை, பிந்துனுவெவ பகுதியில் மோட்டார் குண்டு ஒன்று டன் முஸ்லிம் இளைஞர் ஒருவர் ஊவா பிரதேச குற்றத்தடுப்பு பொலீஸ் பிரி வினரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலீஸாருக்குக் கிடைத்த ஒரு தகவலையடுத்து பிந்துனுவெவ பகுதி யிலுள்ள ஒரு வீட்டைச் சோதனை யிட்ட பொலீஸார் 60மி.மீ. மோட்டார் குண்டைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினமிரவு நடந்த இச் சோதனையில் கைதான வாலிபர் உடனே பதுளை நீதிவான் முன்னி லையில் ஆஜர் செய்யப்பட்டு 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

## நடத்துநர், சாரதி தாக்கப்பட்டதைக் கண்டித்து கிண்ணியா பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

சீனக்குடா,ஜூலை26

கிண்ணியா பஸ் டிப்போ ஊழி யர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத் தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். நடத்து நர், சாரதி ஆகியோர் தாக்கப்பட்டதை ஆட்சேபித்தே வேலைநிறுத்தம் நடை பெறுகிறது.

கடந்த புதன்கிழமை கந்தளாயில் இருந்து கிண்ணியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த இருவருக்கும் நடத்துநருக்கு மிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை யடுத்து, நடத்துநர் தாக்கப்பட்டார். உதவிக்குச் சென்ற சாரதியும் தாக்கு தலுக்கு உள்ளானார்.

இது குறித்து பொலீஸில் புகார் செய்தபோதும் நேற்றுவரை பொலீ ஸார் சம்பந்தப்பட்டவர்கள் மீது நட வடிக்கை எடுக்கவில்லை.

தாக்குதலுக்குள்ளான நடத்துநரும், சாரதியும் கிண்ணியா மாவட்ட வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்கிய இருவரையும் பொலீஸார் கைதுசெய்து நடவடிக்கை எடுக்கும் வரை வேலைநிறுத்தம் தொடரும் என கிண்ணியா பஸ் டிப்போ ஊழியர் கள் தெரிவித்தனர். தாக்கியவர்களில் ஒருவர், அரசியல்வாதி ஒருவரின் முன் னாள் பாதுகாப்பு அதிகாரி என்று தெரிவிக்கப்படுகிறது.

## அனல் மின் நிலையம் நிறுவ அமைச்சரவை அங்கீகாரம்

### திருகோணமலை மாவட்டம் தெரிவு

கொழும்பு,ஜூலை26

300 மெகாவாட் கொண்ட அனல் மின்நிலையம் ஒன்றை நிறுவுவதற் கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருக்கிறது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய, அனல் மின்நிலை யத்தை நிறுவுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

தனியார் துறையினரால் இந்த மின்நிலையம் நிறுவப்படும் எனவும் திருகோணமலை மாவட்டத்தில் அது நிறுவப்படும் எனவும் அரசாங்கப் பேச் சாளர் ஒருவர் கூறினார்.

சூழல் தொடர்பான பிரச்சினை எழாத ஓர் இடத்தை இந்த நிலையம நிறுவுவதற்கு அரசு தெரிவு செய்ய வேண்டியிருக்கிறது எனவும் அவர் சொன்னார்.

## திருமலை மாவட்டத்தில் இன்று முதல் காணியமைச்சின் நடமாடும் சேவைகள்

### இரண்டு வைத்திய முகாம்களுக்கும் ஏற்பாடு

திருகோணமலை மாவட்டத்தில் காணிப் பிரச்சினைகள் மற்றும் காணி கள் வழங்குவது தொடர்பான நடமா டும் சேவையை காணியமைச்சு இன்று நடத்தவிருக்கிறது.

காணி அமைச்சர் ராஜித சேனா ரத்ன தலைமையில் திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஆரம்பமாகும் இச்சேவை 29ஆம் திகதிவரை நான்கு இடங்களில் நடைபெறும்.

திருகோணமலை பட்டணமும் சூழலும், சேருவில், தம்பலகாமம், கிண்ணியா, மொரவெவ, பதவி சிறி வுர, கந்தளாய், கோமர கடவெல ஆகிய இடங்களுக்கான நடமாடும் சேவை இன்று காலை 10 மணி முதல திருகோணமலை கச்சேரியில் நடை பெறும்.

குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவிற்காக நாளை காலை 10 மணி முதல் குச்சவெளி விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் இச்சேவை நடைபெறும்.

ஜூலை 28ஆம் திகதி காலை 10 மணிமுதல் மூதூர் பிரதேச செய லகப் பிரிவுக்காக சேனையூர் மத் திய கல்லூரியிலும் ஜூலை 29ஆம் திகதி காலை 10 மணிக்கு ஈச்சிலம் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்காக ஈச்சிலம்பற்று சென்பானா மகாவித் தியாலயத்திலும் இச்சேவை நடை பெறும்.

இச்சேவையுடன் விசேட வைத் திய நிபுணர்களின் இரண்டு நடமா டும் வைத்திய முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 28ஆம் திகதி மூதூரிலும், 29ஆம் திகதி ஈச்சிலம் பற்றிலும் இம்முகாம்கள் இயங்கும்.

## ரயில் ஊழியர்கள் வேலைநிறுத்தம்; வழமை போல சேவை என்கிறது அமைச்சு

### பாதைகளில் இராணுவம், பொலீஸ் பாதுகாப்பு

கொழும்பு,ஜூலை26

ரயில்வேத் திணைக்களத்தை அதிகாரசபையாக அரசு மாற்றியதை ஆட்சேபித்து ரயில்வே ஊழியர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின் றனர். ஆயினும், இந்த வேலைநிறுத் தத்தினால் ரயில் சேவைகள் பாதிக் கப்படவில்லை என்றும் ரயில் சேவை களைத் தடையின்றி மேற்கொள்ள சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

ரயில்வே பகுதியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் இரவு கூடி பொது வேலை நிறுத்தத் தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்திருக் கின்றன.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதெ னத் தீர்மானிக்கப்பட்டதை அடுத்து அவ்வேளையில் கடமையில் ஈடுபட்டி ருந்த ரயில்வே ஊழியர்கள் வீடு களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வில்லை என்று ரயில்வே தொழிற் சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இராணுவத்தின் வரவழைக்கப்பட்டு அந்த ஊழியர்கள் பலவந்தமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின் றனர் என்றும் தொழிற்சங்கங்கள் கூறு கின்றன.

சில தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போதிலும் ரயில் சேவைகள் எதுவித பாதிப்பு மின்றி நடைபெறுகின்றன எனவும், இதற்கான சகல முன்னெச்சரிக்கை யான நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டுள்ளன எனவும் போக்குவ ரத்து அமைச்சின் ஊடகப் பேச்சா ளர் ரவீந்திர லால் பெரேரா தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

வேலைநிறுத்தத்தில் ஜே.வி.பி., சுதந்திரக் கட்சி, தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சிலரே ஈடுபட்டுள்ளனர். ரயில் சாரதிகள், 'கார்ட்'மார்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக இளைப்பாறிய ரயில் சாரதி களும், 'கார்ட்'மார்களும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ரயில் பாதை களில் இராணுவத்தினரும், பொலீஸா ரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். பொதுமக்களுக்கு போக்குவரத்தில் இடையூறு ஏற்படாது ரயில் சேவைகள் சுமுகமாக நடை பெறுகின்றன. எந்தவொரு சேவை யும் இரத்துச் செய்யப்படவில்லை - என்றார்.

(ஐ)

## சம்பள உயர்வு, நெல்லுக்கு நியாய விலை; அரசின் முன்னுரிமைகள் என்கிறார் பிரதமர்

அரசாங்க ஊழியர்களின் சம்பளங் களை அதிகரிக்கவும் விவசாயிகளின நெல்லுக்கு நியாயமான விலை பெற் றுக்கொடுக்கவும் அரசு முன்னுரிமை வழங்கும் என்று பிரதமர் ரணில் விக் கிரமசிங்க கூறுகிறார்.

இந்த இலக்குகளை அடையும் கடப்பாடு அரசுக்கு உண்டு எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற அரச நாடாளு மன்றக் குழுக் கூட்டத்தில் கூறினார்.

நெல் விளைச்சல் அமோகமாக இருப்பதனால் நியாயமான விலை விவ சாயிகளுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் - இதுவரை பயன் படுத்தப்படாத வெளிநாட்டு உதவிகளை யும் புதிதாகக் கிடைக்கும் உதவி களையும் அபிவிருத்திப் பணிகளுக் குப் பயன்படுத்தவேண்டும் என்றும் பிரதமர் அங்கு கூறினார்.

அபிவிருத்தித் திட்டங்களை ஆரம பிப்பதில் உள்ள காலதாமதங்கள் நீக்கப்படவேண்டும் என்றும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

உலக அரங்கில்

# பலியான உதே, குசே ஹுசைன்களின் படங்களை வெளியிட்டதால் சர்ச்சை

நியூயோர்க்,ஜூலை26

ஈராக்கில் அமெரிக்கப் படையினரின் தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவித்து சதாம் ஹுசைனின் இரு புதல்வர்களதும் படங்களை அமெரிக்கா வெளியிட்டது தொடர்பாக வாஷிங்ரனில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. ஆனால், அந்தச் செயல் நியாயமானதுதான் என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

வழமையாக இத்தகைய உயிரிழந்தவர்களின் படங்களை அமெரிக்கா வெளியிடுவதில்லை. இதற்கு மாறாக உயிருடன் இருந்தபோது எடுக்கப்பட்ட சதாமின் மகன்களது படங்களையும் அவர்கள் உயிரிழந்த பின்னர் எடுக்கப்பட்ட படங்களையும் இம்முறை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. அந்தப் படங்கள் உலகம் முழுவதும் பிரசுரமாகியுள்ளன.

தற்போது சதாமின் உயிரிழந்த புதல்வர்களது படங்களை அமெரிக்கா வெளியிட்டது தொடர்பாக வாஷிங்ரனில் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. இதை அடுத்தே படங்கள் வெளியிடப்பட்டதை ரம்ஸ்பீல்ட் நியாயப் படுத்தியுள்ளார்.

ஈராக்கில் உள்ள அமெரிக்கர்களதும் அவர்களது கூட்டாளிகளதும் உயிர்களைப் பாதுகாப்பதற்காகவும் ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர்கள் மீண்டும் வரமாட்டார்கள் என்பதை ஈராக்கிய மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகவும் தாங்கள், உயிரிழந்த உதே மற்றும் குசே ஹுசைன்களின் படங்களை வெளியிட்டதாக ரம்ஸ்பீல்ட் சொல்கிறார்.

இது தொடர்பாக வியாழனன்று செய்தியாளர்களிடம் பேசிய ரம்ஸ்பீல்ட்,

"அவர்களை ஈராக்கியர்கள் பார்க்க வேண்டியது மிகவும் அவசியமானது. அவர்கள் சென்றுவிட்டார்கள் என்பது தெரியவேண்டும்; அவர்கள் இறந்துவிட்டார்கள் என்பது தெரிய வேண்டும். அவர்கள் மீண்டும் திரும்பி வரமாட்டார்கள் என்பது தெரிய வேண்டும்.

"நான் நினைக்கின்றேன் அந்தப் படங்களை வெளியிடுவ தற்கு எடுக்கப்பட்ட முடிவு மிகச் சரியானது என்று. ஆனால், அந்த முடிவை எடுப்பதற்கு நாம் அதிகம் சிந்திக்க வேண்டியிருந்தது" - என்றார். (ம)




ஸ்பெயினின் வடபகுதி நகரமான இஸ்டெலாவில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் காயமடைந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். அங்கு பிரிவினை கோரிப் போராடிவரும் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளதாக உள்ளூர் செய்தி நிறுவனம் தெரிவித்தது. காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றார்.

## யானைகளுக்கு இந்தியாவில் ஓய்வூதியம்

புதுடில்லி,ஜூலை26

வேலை செய்யும் யானைகளில் 65 வயதுக்கு மேற்பட்டவற்றுக்கு ஓய்வூதியம் வழங்க இந்தியாவின் கேரள மாநில அரசு தீர்மானித்துள்ளது.



அரச வேலைகளில் ஈடுபடுத்தப்படும் யானைகளில் 65 வயதைக் கடந்தவற்றுக்கு உணவு, சுகாதார வசதிகள் மற்றும் வாழ்விட வசதிகளை அளிக்கவுள்ளதாக அந்த மாநில வனவளத்துறை அமைச்சர் கே.சுதாகரன் தெரிவித்தார்.

இந்தியாவில் பல்வேறு தொழில்களிலும் யானைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை வீதிகளில் நடமாடுவது அங்கு சர்வசாதாரணமானது.

"காட்டில் இருந்து பிடித்துவரப்படும் யானைகளுக்கு அதன் உரிமையாளர்கள் கொடுக்கும் துன்பங்களையும் அதனால் யானைகள் நடந்துகொள்ளும் முறையையும் குறித்து நாம் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றோம்" - என்று அமைச்சர் கே.சுதாகரன் சட்டசபையில் தெரிவித்தார்.

காட்டில் ஒரு யானை 70 ஆண்டுகள்வரை உயிர் வாழ்கின்றது. ஆனால், அவை பிடிக்கப்பட்டு நாட்டுககுள் கொண்டுவரப்பட்டதும் அதன் ஆயுள் குறைகின்றது. இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட தன் பின்னர், 65 வயதைக் கடந்த யானைகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், இந்த யானைகள் ஓய்வூதியத்தை தனியார் வசம் இருக்கும் யானைகளும் சர்க்கஸ் நிறுவனங்களில் பணிபுரியும் யானைகளும் பெறமுடியாது என்றும் அவர் சொன்னார். (ம)

## சதாமின் மகன்கள் உயிருடன் இருக்கின்றனர் அரபு தொலைக்காட்சி

சதாம் ஹுசைனின் இரு புதல்வர்களும் சுட்டுக்கொல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்து வருகையில், அவர்கள் இருவரும் உயிருடன் இருப்பதாக அல்-அராபியா என்ற அரபுத் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு கூறிய அரபுத் தொலைக்காட்சி, உதேய் மற்றும் குசே இருவரும் உரையாடிக்கொண்டிருக்கும் காட்சி ஒன்றையும் ஒளிபரப்பியது.

சதாமின் புதல்வர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கான படங்களை அமெரிக்கா ஆதாரபூர்வமாக வெளியிட்டுள்ள நிலையில், அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அரபு தொலைக்காட்சி கூறியிருப்பது பெரும ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இரண்டு செய்திகளையும் கேட்டு குழப்பமடைந்துள்ள ஈராக்கியர்கள் அமெரிக்காவின் செய்தியை நம்புவதா? அல்லது அரபு தொலைக்காட்சியின் செய்தியை நம்புவதா? என்று தெரியாமல் குழப்பத்தில் உளளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால், உதேய் மற்றும் குசே விடயத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டதை நம்ப வேண்டுமாயின் அவர்களின் உடல்களை வீதியில் காரில் கட்டி இழுத்துச் செல்லப்பட வேண்டும் என்று பக்தாத்தில் உள்ள பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால், சதாமிற்கு நெருக்கமான முஹமட் என்பவர் கூறுகையில் இது அமெரிக்காவின் கபட நாடகம் என்றும் இதனைத் தான் நம்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ம)

# தொடரும் சண்டையால் லைபீரியாவில் பெரும் எண்ணிக்கையானோர் அவதி!

மொன்ரோவியா,ஜூலை26

லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் தொடர்ந்து அரச துருப்பினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சண்டைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் தலைநகரை விட்டு இடம்பெயர்ந்து சென்றுள்ள பொதுமக்கள் உரிய அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர். குடிதண்ணீர் இல்லாமல் பெரும் எண்ணிக்கையானவர்கள் தவித்து வருவதாக தொண்டர் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.


சண்டைகள் தொடர்வதால் வெளிநாடுகளின் அமைதிப் படையினர் அங்கு செல்லமுடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நடந்த சண்டையில் தலைநகரில் 11 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலை பற்றி ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பிரதிநிதிகள் லைபீரிய சண்டைத் தரப்புக்கள் இரண்டுடனும் வியாழனன்று மாலையில் பேச்சுக்களை ஆரம்பித்தனர். மூடிய கதவுகளுக்குப் பின்னால் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அதேநேரம் ஐ.நா. பாதுகாப்புச் சபை தனது படைகளை லைபீரியாவுக்கு அனுப்பாதது குறித்து ஐ.நாவுக்கான லைபீரியாவின் விசேட பிரதிநிதி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளும் மேற்காபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் ஐ.நா. பிரநிதிகளும் ஒரு நாள் முழுவதும் கூடி ஆராய்ந்துள்ள போதும் எந்த ஓர் உறுதியான முடிவையும் அவர்கள் எடுக்கவில்லை. ஏற்கனவே லைபீரியாவுக்கு அனுப்புவதாக இணக்கம் காணப்பட்ட நைஜீரியப் படைகளை அங்கு அனுப்புவது தொடர்பாகவும் அவர்கள் முடிவு எதனையும் எடுக்கவில்லை.



லைபீரியாவுக்குச் செல்லும் அமைதிப் படையின் செலவுகளுக்காகத்தான் ஒரு கோடி டொலர் பணத்தை வழங்குவதாக அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. ஆனால், இது வரை எந்த நாடு படைகளை அனுப்பும் என்பது முடிவு செய்யப்படவில்லை.

இதற்கிடையில் -

சண்டைகள் கடந்த 7 நாள்களாகத் தொடர்ந்து வருவதால், தலைநகரை விட்டு இடம்பெயர்ந்த அகதிகளின் நிலை பெரும் கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

குடிதண்ணீர் இல்லாமையால் பெரும் எண்ணிக்கையான அகதிகள் தொற்று நோய்களுக்கு உள்ளாகக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தொண்டர் நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர். (ம)

### செப்ரெம்பர் 11 தாக்குதலுடன் தொடர்பு:

# அமெரிக்க காங்கிரஸ் அறிக்கைக்கு சவூதி ஆத்திரத்துடன் கண்டனம்

றியாத்,ஜூலை26

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 இல் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்கும் சவூதி அரேபியாவுக்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்க காங்கிரஸ் தெரிவித்த கருத்துக்கு சவூதி அரசு கடும் ஆத்திரத்துடன் கூடிய கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க புலனாய்வாளர்கள் செப்ரெம்பர் 11 தாக்குதலைக் கண்டுபிடிக்கத் தவறியமை தொடர்பாக நடத்திய விசாரணை அறிக்கையை - 900 பக்கங்கள் அடங்கியது - காங்கிரஸ் சமர்ப்பித்திருந்தது. அதில் சவூதி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தாக்குதலை நடத்தியவர்கள் விமானக் கடத்தலில் ஈடுபடுவதற்கு றியாத் உதவியதாகவும் அமெரிக்கப் புலனாய்வாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அது தவறியிருந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த 900 பக்க அறிக்கையில் 28 பக்கங்கள தமது நாட்டைப் பறறியும் தமது மக்களைப் பற்றியும் களங்கப்படுத்தும் முறையில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான சவூதித் தூதுவர் இளவரசர் பண்டர் பின் சுல்தான் தெரிவித்துள்ளார்.

"சவூதி எதனையும் செய்யவில்லை. நாங்கள் மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க கடமைப்பட்டவர்கள். ஆனால், வெறும் பக்கங்களுக்கு நாம் பதிலளிக்க வேண்டியதில்லை" - என்று அவர் ஆத்திரத்துடன் குறிப்பிட்டார்.

சவூதி பற்றி குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாவதற்கு வெள்ளை மாளிகை தடைவிதித்து விட்டது என்பதனால், எந்தவிதமான குற்றச்சாட்டுக்கள் சவூதி மீது சுமத்தப்பட்டுள்ளது என்று முழுவதுமாக அறியமுடியாத நிலை உள்ளது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சவூதி அரசு ஏற்கனவே மறுத்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# நான்கு சில்லு மோட்டார் வாகனத்தின் மூலம் கடலில் பயணித்த சட்டவிரோத குடியேறிகள்!

### அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றவேளை அகப்பட்டனர்

புளோரிடா,ஜூலை26

1951ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட நான்கு சில்லு மோட்டார் வாகனம் ஒன்றை மோட்டார் படகாக மாற்றியமைத்து அதனை ஓட்டிவந்த கியூபாவைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகள் சிலரை அமெரிக்க கரையோர காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

கரையில் இருந்து சுமார் 40 கி.மீ. தூரத்தில் கைதான இவர்கள் விசாரணைகளின் பின்னர் மீண்டும் கியூபாவிற்கு அனுப்பப்பட்டனர்.

மோட்டார் வாகனத்தில் இயந்திரத்துடன் மேலதிகமாகப் பொருத்தப்பட்ட ஓர் இயந்திரசாதனத்தின் மூலம் இந்த மோட்டார் படகு மணிக்கு எட்டு கி.மீ. வேகத்தில் பயணித்துள்ளது.

மோட்டார் வாகனத்தை மிதக்கச் செய்வதற்காக அதன் அடியில் 55 வெற்றுப் பரல்கள் கட்டப்பட்டிருந்தன.

குளிர்சாதனப் பெட்டிகள், குளியல் தொட்டிகள் போன்றவற்றை படகுகளாகப் பயன்படுத்தி கியூபா மக்கள் அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக குடியேறிவருகின்றனர். எனினும், நான்குசில்லு மோட்டார் வாகனம் படகாகப் பயன்படுத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சட்டவிரோதமாகக் குடிபெயரும் கியூபர்கள் அமெரிக்காவில் தரையிறங்கினால் அவர்களை அமெரிக்கா திருப்பியனுப்புவதில்லை. ஆனால், கடலில் வைத்துக் கைதுசெய்யப்படுமிடத்து அவர்கள் திருப்பியனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு திருப்பியனுப்பப்படுபவர்கள் கியூபாவில் கடும் தண்டனைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். கடந்த ஏப்ரல் மாதம் கியூபா அரசின் படகைக் கடத்தி அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக குடியேற முயன்ற மூவருக்கு கியூபா மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது சதாம் ஆதரவுப் படையினர் பலரை அமெரிக்க இராணுவத்தினர் கைது செய்து தடுத்துவைத்தனர்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12பேர் கைதாகினர்

கொழும்பு,ஜூலை26

தென்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களின் பேரில் தேடப்பட்டுவந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12பேரும், குடிபோதை மற்றும் அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய 27பேரும் கடந்த 21ஆம் திகதி வெலிக்கடைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வெலிக்கடைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் -

இவர்களில் சிலர் திரும்பவும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் - வெலிக்கடைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ)

# மேல் கொத்மலை நீர்மின்திட்ட வேலைகள் நடைபெறுகின்றன

## அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை26

மேல் கொத்மலை நீர்மின்திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய நேற்று முன தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரிச் சட்ட மூல விவாதத்தில் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன உரையாற்றிக் கொண்டிருந்த போது பொஜமுஎம்பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குறுக்கிட்டார். மேல் கொத்மலை நீர்மின்திட்ட வேலைகள் நடைபெறுகின்றனவா? இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று கேட்டார்.

இது குறித்து எரிசக்தி, மின்சக்தி அமைச்சரைக் கேளுங்கள் என்றார் பிரதி நிதியமைச்சர்.

அதற்குள் குறுக்கிட்ட ஆர்.யோகராஜன் எம்.பி. 'அந்த வேலைகள் நிறுத்தப்பட்டுவிட்டனவே' என்றார்.

அமைச்சர் கரு ஜயசூரிய பதிலளிக்கையில்:-

'அப்படி யார் சொன்னது? மேல் கொத்மலை நீர்மின்திட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன' - என்று கூறினார். (எ)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த வாரம் ... மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் வித்தியாலய ஆசிரியர் செ.நவரத்தினசாமி பயனாளியொருவருக்கு மூக்குக் கண்ணாடி அணிவிப்பதை படத்தில் காணலாம். (எ-117)

# போதை தவிர்ப்பு பற்றிய போட்டி முடிவுகள் வெளியாகின

வலிகாமம் தெற்கு,ஜூலை26

போதைப்பொருள் தவிர்ப்பு கல்வி பற்றி வலிகாமம் கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வலய மட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று போட்டியாளர்களின் விவரம் வருமாறு:-

**சுவரொட்டிப் போட்டி**

சிரேஷ்டபிரிவு:- அ.மனோகரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலபாடசாலை), பா.சுரேஸ்கண்ணா (இணுவில் மத்திய கல்லூரி), ஜெ.துமிஸிகா (உடுவில் மான்ஸ் ம.வி.)

**கட்டுரைப் போட்டி**

கனிஷ்ட பிரிவு:- ஜெ.கவிதரா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), அ.ஆரதினி (அளவெட்டி அருணோதயக கல்லூரி), அமோகினி (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி).

**சிறுகதைப் போட்டி**

சிரேஷ்ட பிரிவு:- ச.நிஷாந்தினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), வி.பிரியா(யூனியன் கல்லூரி), த.தர்சிகா(பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

**பேச்சுப் போட்டி**

கனிஷ்ட பிரிவு:- சு.லக்ஸா (இராமநாதன் கல்லூரி), மு.சிந்துஜா (பிரானபற்று கலைமகள் வித்தி.), ச.கீரன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி).

சிரேஷ்ட பிரிவு:- எ.கிறேசியன (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), இ.நசிதன் (அருணோதயக் கல்லூரி), அ.அனுசியா (மகாஜனக் கல்லூரி).

நாடகப்போட்டிக்கு உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி என்பன தெரிவாகின. (எ-152)


STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

Available Courses

Engineering, Electronics, Communication, Mechanical, IT, B.Sc Micro Biology, Genetics, Computer Science, BBM, BBA, BCA, B.Com, and Diploma Courses, மற்றும் பாடநெறிகள்

Admission, Visa and Hostel arrangements செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50றக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

Become a World Recognized GRADUATE

மேலதிக விபரங்களை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள

IPAS- Institute of Professional Accounting Studies
199, Main Street, Jaffna. Tel: 0777-563292



Affiliated to
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road.,
Colombo-06. Tel: 074-512 591


# நூலகப் பாவனை குறித்து பொது விழிப்புணர்வு தேவை

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வலி.தெற்கு,ஜூலை26

வாசிப்பு பழக்கத்தினதும், நூலகங்களினது பயன்பாடுகள் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதுபோன்ற நூலகக் கண்காட்சிகளை ஏற்படுத்தி விழிப்புணர்வை தோற்றுவிக்கச் செய்வது எமது கடமையாகும்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட நூலகக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி மேற்கண்டவாறு கூறினார்.

நூலகக் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றிய ரி.வி.கிருஷ்ணசாமி மேலும் கூறியதாவது:-

இன்று நமது மக்களிடையே பல்வேறு காரணங்களால் நூல்களை வாசிக்கின்ற பழக்கம் வெகுவாக குறைவடைந்துள்ளது. வாசிக்கும் பழக்கத்தை தூண்டக்கூடியதான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நூலகங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற வாசகர் வட்டங்கள், நூலக ஆலோசனைக் குழுக்கள் என்பனவற்றை நல்ல முறையில் அமைத்து பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மாநகர சபை நூலகத்தை தவிர, உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய 55 நூலகங்கள் இயங்குகின்றன.

மாநகர சபைக்குரிய நூலகங்களின் செயற்பாடுகள் போல் ஏனைய நூலகங்களும் செயற்பட்டு வளர்ச்சி பெறவேண்டும்.

மக்கள் அனைவரும் நூலகங்களை சிரமமின்றி பயன்படுத்த நூலகங்கள் நல்ல அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். மக்களின் கலை, கலாசாரம் போன்றன 'இன்ரநெற்' வரை வளர்ச்சி கண்டுள்ள போதிலும் நூலக பயன்பாடுகள் மக்களுக்கு அவசியமாகின்றது.

பாடசாலைகளில் அண்மைக்காலங்களில் நூலக வளர்ச்சிக்கான பல செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மக்களின் தேவை கருதி அதிக விலை கொடுத்து வாங்கப்படும் நூலகத்து நூல்களை மக்கள் உரிய முறையில் பயன்படுத்த| வைக்காவிடடால் நூலகத்தின் பயன்பாடுகள், சேவைகள் என்பன அர்த்தமற்றதாகி விடும்-என்றும் அவர் கூறினார். (எ-152)

### பாடசாலை நூலகத்தில் தளபாட வசதி இல்லை

சண்டிலிப்பாய்,ஜூலை26

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் நூலகத்தில் அலுமாரி மற்றும் தளபாடங்கள் இன்மையால் மாணவர்கள் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்பட்டது.

அத்துடன், இவ்வித்தியாலயத்தில் கட்டப்பட்ட சுற்று மதிலின் 50 வீத வேலைகள் பூர்த்திசெய்யப்படாது இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### உணர்வூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை26

சமூக அபிவிருத்தி மன்றமும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து சமூக மேம்பாட்டுத் திட்டக் கிராமங்களுக்கான உணர்வூட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ந.ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகவும் வோல்கன்ஸ் கரட்வோ சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.(எ-6)

### அனுமதியின்றி மணல் ஏற்றியோர் கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை26

உழவு இயந்திரங்களில் அனுமதியின்றி மணல் ஏற்றிச்சென்ற இருவர் யாழ்.பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சுண்டுக்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் லக்ஸ்மன், நவாலி வடக்கைச் சேர்ந்த நவரத்தினம் தங்கத்துரை ஆகிய இருவருமே இவ்வாறு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

நீதிவான் இவர்களை தலா இரண்டாயிரம் ரூபா வீதம் உடன் தண்டப் பணம் செலுத்துமாறும் கைப்பற்றப்பட்ட மணலை யாழ். கே.கே.எஸ். வீதியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு வழங்கும்படியும் உத்தரவிட்டார். (எ-ரி)

### மாடு திருடிய வழக்கில் ஒருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஜூலை26

பட்டியில் கட்டப்பட்டிருந்த இரு மாடுகளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமம், அல்லாரை வடக்குப் பகுதியில் கட்டப்பட்டிருந்த இரு மாடுகளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கார்த்திகேசு இராசரத்தினம் என்பவரையே விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அல்லாரை வடக்கைச் சேர்ந்த சிவகுரு அன்புழகன் என்பவரின் மாடுகளே திருட்டுப் போனவையாகும். (எ-117)

# இந்திய இழுவைப் படகுகளால் வடமராட்சி மீனவர் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை26

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய இழுவைப் படகுகளால் வடமராட்சிப் பிரதேச மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய படகுகளைப் போலன்றி இந்திய இழுவைப் படகுகளின் பிரவேசமானது கடல்வளம் முழுவதையும அள்ளிச்செல்லக்கூடியது. தினமும் இவ்வாறு எமது கடற்பிரதேசத்தினுள் பிரவேசிக்கும் இழுவைப்படகுகள் எதுவித தடையுமின்றி கடல்வளங்களை அள்ளிச்செல்கின்றன.

இதனால், எமது மீனவர்கள் தொழில்செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன், கடலுணவுகள் எதனையும் பெற்றுக்கொள்ளாமல் வெறுங்கையுடன் திரும்பிவரவேண்டிய நிலையும் காணப்படுகிறது.

கடந்த புதன் இரவு நூற்றுக்கு மேற்பட்ட இழுவைப்படகுகள் இவ்வாறு பிரவேசித்து கடலில் தொழிலில் ஈடுபட்டமையால் எமது மீனவர்கள் தமது வலைகளை இழந்ததுடன் நள்ளிரவு வேளையில் கரைக்குத் திரும்பிவர வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஆனால், அப்படி நள்ளிரவில் திரும்பி வருவதற்கும் கடற்படையினரின் அனுமதி இல்லாத காரணத்தினால் மீனவர்கள் கடலில் தரித்து நின்றுவிட்டு அடுத்தநாள் காலையிலேயே கரை திரும்பினர்.

தொண்டமனாறு தொடக்கம் மணற்காடு வரையான கடற்பிரதேசத்தில் தினமும் தொழிலில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளால் எமது மீனவர்கள் தொழில் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன், பெரும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரசாங்க அதிபர், கடற்றொழில் அமைச்சர், இந்தியத் தூதர் உட்பட பலருக்கும் மகஜர்கள் அனுப்பியும் கூட இதனைத் தடுக்க எவரும் முன்வரவில்லை. இது விடயத்தில் நாம் தனித்து விடப்பட்டுள்ளோமோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 - 07 - 1943

மறைவு 25 - 07 - 1995

**அமரர் செல்லையா சண்முகநாதன்**

(இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

திரயோதசி - சனிப்பிரதோஷம் (26-07-2003)

அன்பு அப்பா!

நீங்கள் விண்ணகம் சென்று
எட்டாண்டுகள் ஆனாலும்
எமது உயிர் உள்ளவரை உங்கள்
நினைவலைகள் எங்கள் மனதைவிட்டு மறையாது.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மகள்
குடும்பத்தினர்.

'வள்ளுவர் இல்லம்'
இணுவில் மேற்கு. (20676) (21-12-19)

## மரண அறிவித்தல்

**திருமதி நடேசபிள்ளை மகேஸ்வரி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசபிள்ளை மகேஸ்வரி 24.07.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதிகளின் அன்பு மகளும நடேசபிள்ளையின் அன்பு மனைவியும் நடேஸ்வ்ரன், மகேஸ்வரன், மனோகரன், மேனகா, கேதீஸ்வரன், யோகேஸ்வரன், ஜெயமனோகரி ஆகியோரின் அன்புத் தாயாரும கந்தையா, ஆறுமுகம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி.
T.P.No: 01 527755 (20705) (21-13-19-25)

தகவல்:
த.கந்தையா

உதயன்

## வடக்கு - கிழக்கு பிரிப்பு பிரிவினைக்கு வழிகோலும்

பிரிவினை பற்றிய இரண்டு தகவல்கள் இப்போது வெளியாகியிருக்கின்றன. ஒன்று கோரிக்கை; மற்றது எச்சரிக்கை.

இணைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கை முதலாவது. மகாநாயக்க தேரர்கள் உட்பட 47 அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பு மகஜர் ஒன்றின் மூலம் இக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து தனித்தனி வெவ்வேறு நிர்வாக அலகுகளின் கீழ் அவற்றைக் கொண்டுவருமாறு ஜனாதிபதி குமாரதுங்கவுக்குத் தாம் சமர்ப்பித்த மகஜரில் அந்த அமைப்பு கோரியிருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் பிரிவினை பற்றிய எச்சரிக்கையை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டிருக்கின்றார் யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவைச் சேர்ந்த வண.பிதா எஸ்.ரவீந்திரன்.

தென்பகுதியிலிருந்து வடக்கே வந்த பத்திரிகையாளர்களுக்கும் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்த கலந்துரையாடலின்போதே இந்த விடயத்தை அவர் தெளிவுபடுத்தினார்.

"இலங்கை ஒரே நாடாக இருக்கவேண்டும் என்று தென்பகுதியில் உள்ள மக்கள் விரும்புகின்றனர். ஆனால், அரசியல்வாதிகளும் சில பெரும்பான்மை இனவாதிகளும் அதனை விரும்புவதாகத் தெரியவில்லை. இந்த நாடு ஐக்கியத்துடனும், சமாதானத்துடனும், சாந்தியுடனும் இருக்கவேண்டுமானால் தென்பகுதி மக்களும் அரசியல்வாதிகளும் தமிழ்மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தடுக்கமுடியாது" என்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் வண.பிதா ரவீந்திரன்.

வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் தாயகம். அதைத் துண்டாடி, அதன்மூலம் அவர்களின் தனித்துவத்தையும் இருப்புக்கான உரிமையையும் பறித்து, அவர்களது தாயகத்திலேயே அவர்களை சிறுபான்மையினராக்கி, மேலும் அவர்களை அடக்கி, ஒடுக்குவதில் பேரினவாதம் விடாப்பிடியாக நிற்கின்றது.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு சிங்களத் தலைவர்கள் எடுக்கும் தீவிர முயற்சி இதனைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்தத்தீவு இரண்டு அரசுகளாக - இரண்டு நாடுகளாக - துண்டாடப்படும் நிலையைத் தவிர்த்து, ஐக்கியத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கான இறுதி முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மூன்றாவது நாடு ஒன்றின் அனுசரணையோடு மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டி, முட்டிமோதி நிற்கும் இன்றைய நிலையில் அந்த முயற்சிக்கு மேலும் முட்டுக்கட்டை போடும் விதத்தில் வடக்கு - கிழக்கு பிரிப்புக்கான ஆயத்தச் செயற்பாடாக அது தொடர்பான கோரிக்கை, தென்பகுதி பிரமுகர்கள் பெயரால் முன்மொழியப்பட்டிருக்கின்றது.

"ஒருமொழி இருநாடு; இருமொழி ஒருநாடு" - என்று நான்கு தசாப்த காலத்துக்கு முன்னர் இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர்.டீ. சில்வா தீர்க்கதரிசனத்தோடு தெரிவித்த கூற்று, இன்று பெருமளவில் பொருந்திவரும் யதார்த்த நிலை காணப்படுகின்றது.

அதுபோன்றே "வடக்கு - கிழக்கு பிரிப்பு, நாடு பிரிப்பதற்கு வழிசெய்யும்" என்ற வாய்மொழி எதிர்காலத்தில் நிஜமாகும் சூழ்நிலை ஏற்படலாம்.

இவ்வளவு பட்டுத் தெளிந்த பின்னரும் இனவாதிகள் திருந்தவில்லை என்றால், அறுவைச் சிகிச்சைதான் பலன் தரும் என்ற சூழ்நிலை ஏற்படுவதை யாராலும் தடுக்கமுடியாமல்போய்விடும்.

தாயக உரிமைக்காகத் தமிழர்கள் போராடும் இச்சமயத்தில், அந்தத் தாயகத்தை கூறு போடும் முயற்சி, உரிமைப்போரை மேலும் தீவிரமாக்குமே தவிர, அமைதித் தீர்வுக்கு வழி செய்யாது என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்துகொள்வது நல்லது.

---

மீள் நியமனம் பெற்றவர்களில்

## 60 வயது ஆகாத கிராம அலுவலருக்கு இனிச் சம்பளம் மட்டுமே கிடைக்குமாம்

### யாழ். செயலகம் அறிவிப்பு

தென்மராட்சி,ஜூலை26

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் மீள்நியமனம் பெற்றுக் கடமையாற்றிவரும் 60 வயதுக்கும் குறைந்த கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியமும் சம்பளமும் சேர்த்து வழங்கமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு சம்பளம் மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், 60 வயதுக்கு மேற்பட்ட மீள்நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியமும் சம்பளமும் வழங்கப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. 60 வயதுக்கு குறைவான மீள்நியமனம் பெற்ற கிராம அலுவலர்கள் 60 வயதைப் பூர்த்தி செய்யும் போது சம்பளத்துடன் ஓய்வூதியமும் வழங்கப்படும்.

60 வயதுக்குட்பட்ட கிராம அலுவலர்களுக்கு மீள்நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குவதை நிறுத்துமாறும் - இக்காலப் பகுதியில் வழங்கப்பட்ட ஓய்வூதியத்தினை மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் - அந்தந்த பிரதேச செயலர்களுக்கு யாழ். செயலகம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

---

## நாட்டு நடப்பு

### கயல்விழியாளின் கண்ணீர்க் கடிதம்

*அன்பின் முல்லை வளவ!*

நேற்று நான் கண்ட காட்சி
நெஞ்சத்தை பிழிந்த தன்றோ!
வறண்டு போய் மெலிந்த தேகம்
வயிற்றினில் கொடிய 'அல்சர்'
நிதமும் கால் அடித்த தாலே
நிறையதும் நாற்பதாகிப் போக
கறுத்திட உடல் கருகி
கையிலே 'சிகரட்' ஏந்தி
குடைக்குள்ளே தன் காதலியை
கூட்டியே கடைக்குச் சென்று
கால் பாதி பாணும் மற்றும்
கட்டிச் சம்பலும் வாங்கிக் கொண்டு
அருகினில் இருந்திருவர் ஒன்றாய்
அதைப் பகிர்ந்து உண்ணக் கண்டேன்
வளவ! உன் உடல் அமைப்பை
வடிவதைக் கண்ட எனக்கு
மனத்தினில் கவலை மேவ
மடலிதை வரைகின்றேன் யான்.

*கண்ணீர் சிந்தும் கயல்விழியாள்.*

- விகடகவி.

---

## நலன்புரி முகாம்களில் உள்ளோர் அடிப்படை வசதிகளின்றி அல்லல்!

### இணையம் நடத்திய ஆய்வில் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ். குடாநாட்டில் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளோர் அடிப்படை வசதிகள் இன்றி அவலப்படுவதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரால் அண்மையில் யாழ். குடாநாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் வன்னிப் பகுதியிலிருந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் சுமார் 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தாம் குடியமர்வதற்கு வேண்டிய இருப்பிட வசதிகளோ அன்றி ஏனைய அடிப்படை வசதிகளோ இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் உள்ள கோணப்புலம் நலன்புரி முகாமில் சுமார் 50 குடும்பங்களும் ஊரணி மற்றும் நீதிவான் முகாம்களில் 20 குடும்பங்களும் -

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள கிருஷ்ணன் கோயில் பகுதியில் உள்ள முகாமில் 12 குடும்பங்களும் -

உடுவில் பிரதேசத்தில் உள்ள சபாபதிப்பிள்ளை முகாம், இக்கிரான் முகாம் மற்றும் மட்டக்கச்சி முகாம் ஆகியவற்றில் 49 குடும்பங்களும் -

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள சண்டிலிப்பாய் வடக்கு முகாம், அட்டகிரி முகாம் மற்றும் புலவர் முகாம் ஆகியவற்றில் 38 குடும்பங்களும் -

சங்கானையிலுள்ள காட்டுப்புலம் முகாம், கம்பனை முகாம் மற்றும் நீதிவான் முகாம் ஆகியவற்றில் 30 குடும்பங்களும் -

பருத்தித்துறை இலட்சுமணன் தோட்ட முகாம், சென்.லூர்து மாதா கோயில் முகாம் மற்றும் கற்கோவளம் முகாம் ஆகியவற்றில் 13 குடும்பங்களும் -

அடிப்படை வசதிகள் கூட இன்றி கஷ்டப்படுவதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மீள்குடியமரும் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு பல சர்வதேச நிறுவனங்கள் குடாநாட்டில் செயற்படுகின்றபோதும் அவை இக்குடும்பங்களின் புனர்வாழ்வில் பாராமுகமாக இருப்பது மிகவும் வேதனை அளிப்பதாக இணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக அண்மையில் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்த புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அமைச்சின் செயலாளர் கே.ஜெயரட்ணாம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் எஸ்.செல்வக்குமாரன் ஆகியோரிடம் சகல புள்ளிவிவரங்களுடனும் எடுத்துக்கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

---

## இந்திய மீனவரின் அத்துமீறல்களை தடுக்க விரைவில் தீவிர நடவடிக்கை

### சமாசத் தலைவர் தவரட்ணம் தெரிவிப்பு

குடாநாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கும் பகுதிகளுக்குள் இந்திய மீனவர்கள் மேற்கொண்டுவரும் அத்துமீறல்களை முற்றாகக் கட்டுப்படுத்த விரைவில் ஓர் இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

நீண்டகாலமாகவே பல வகையான இன்னல்களின் மத்தியில் குடாநாட்டுக் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், குடாநாட்டு கடற்றொழிலாளர்களை மிக மோசமாகப் பாதிக்கும் வகையில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்தும் முகமாக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரிடம் நேரடியாகவும் அறிக்கைகள் மூலமும் பலமுறை முறையிட்டுள்ளோம். ஆனால், அவர்கள் இப்பிரச்சினைக்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. இதுபோன்று கடந்த புதன்கிழமையும் வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் எமது கடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாது கரைக்குத் திரும்பியுள்ளனர். இந்திய மீனவர்களின் இத்தகைய அத்துமீறல்கள் தொடர்பில் கடற்படையினர் பாராமுகமாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இதனால், மிக விரைவில் நமது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் அனைத்தையும் கூட்டி இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வினை நாமே எடுககவுள்ளோம். அத்துடன் நாம் எடுதத முடிவினையும் இந்திய மீனவர்களின் அண்மைக்கால அத்துமீறல்களையும் அரசுக்குத் தெரிவிக்க ஒரு குழுவும் அமைக்கப்படும் - என்றார் அவர்.

(ஒ-6-ரி)

---

## அக்கராயன் ஆஸ்பத்திரிக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருக!

### மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை26

அக்கராயன் வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரி பிரதேச மக்களின் சார்பில் கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மகஜர் ஒன்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1996ஆம் ஆண்டு மேற்படி வைத்தியசாலை அக்கராயன் சுற்றயற்கூறு வைத்தியசாலையாக இருந்தது.

அன்றைய வைத்தியத் தேவைகளைவிட தற்போதைய சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப வைத்தியத்தேவை அதிகரித்துள்ளது. ஆனால், அன்றைய காலப்பகுதியில் இருந்த வைத்திய வசதிகள் கூட இன்று இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, அவசரமானதும், அத்தியாவசியமுமான பின்வரும் அடிப்படைத் தேவைகளை மேற்படி ஆஸ்பத்திரிக்கு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மருத்துவ அதிகாரி, பதிவு மருத்துவ அதிகாரி, மருத்துவ தாதியர், மருத்துவ உதவியாளர்கள், ஆய்வுகூடப் பரிசோதகர், மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தர்கள் போன்றோர் நியமனம் செய்யப்படவேண்டும். அத்துடன் அம்புலன்ஸ், நீர், மின்சார வசதிகளும் இந்த ஆஸ்பத்திரிக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள மாதாந்த சிகிச்சைப் பிரிவை (கிளினிக்) மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்படி வைத்தியசாலையில் போதியளவு வைத்திய விடுதிகள், சுகாதாரப் பரிசோதகர் விடுதிகள், நோயாளர் விடுதிகள் உள்ளமை தெரிந்ததே - என்று அதில் உள்ளது.

(எ-17)

---

### நாளை

ஆடி 11
ஞாயிற்றுக்கிழமை
(27.07.2003)
திதி : திரயோதசி
நண்பகல் 12.03 வரை.
நட்சத்திரம் : திருவாதிரை
முன்னிரவு 8.23
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32- 06.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அடுத்தவேளை உணவு உங்களிடம் இருந்தாலேயே இந்தவேளை விருந்துக்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

தாவரவியற்றுறையில் கடமையாற்றும் எமது நண்பன்
திரு.மு.வேலாயுதம்பிள்ளை அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் செ.முருகுப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
தாவரவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(20683) (25-24-19-15)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 06 - 1936



உதிர்வு 30 - 07 - 1989

### திருமதி மாசிலாமணி பாக்கியமலர்

திதி: 26.07.2003 திரயோதசி

தேவருலகில் வாழ்கின்ற - எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் - நாளும்
"பாக்கியமலர்" காவுகின்றோம்.

பேசிச்சிரித்த முகம்பார்த்து - தாய்மைப்
பெட்டகத்துள் - தவழ்கின்றோம்
வீசிச் சிரிக்கும் பொன்காற்றில் - மாசில்
வீணையின் தவமாகின்றோம்.

அம்மாவைப் பாடிடுவோம் - தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம் தாயை என்றும் வணங்குவோம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத:

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

"மணிமலர் இல்லம்",
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(20667) (26-24-19-15)

## 5ஆம் ஆண்டு அஞ்சலி

மலர்வு 24 - 10 - 1944



உதிர்வு 21 - 07 - 1998

### திருமதி செல்லத்துரை மகேஸ்வரி

வருடங்கள் ஐந்து ஆனதம்மா மாறவில்லை எம்துயரம்
தேசம் விட்டுச் சென்ற உந்தன் பிஞ்சுகளும் ஏங்குதே!
பாசம் வைத்த எங்களுயிர்த் தெய்வமே! அம்மா!!
பாரினிலே இனிமேல் உம்மை எங்குநாம் காண்போம்?

பிரிவால் துயருறும்:

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

16/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (20656) (26-24-19-15)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 01 - 1950



உதிர்வு 25 - 07 - 1983

### அமரர் கந்தையா இராஜேந்திரம்

(றொபேட் மாமா)

ஆண்டுகள் பல சென்றாலும் - உன்
நினைவு நிற்குதடா!
ஆண்டு மறைந்தாலும் உன்
நினைவு மறையாதடா!
றொபேட் மாமா என்ற சொல்
எல்லோர் மனதிலும் நிலைத்திருக்குமே!

அக்கா, அண்ணா,
சின்னண்ணா, தங்கை.

கருணேந்திரன் (சோதிட ஆய்வாளர்),
ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.

(20658) (25-24-19-15)

# தொழில்துறைத் திணைக்கள ஏற்பாட்டில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை26

தொழில்துறைத் திணைக்களத்தினால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள கண்காட்சியில் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த விரும்புவோர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண தொழில்துறை திணைக்களத்தின் மாகாண மட்டக் கண்காட்சியும், போட்டியும் செப்ரெம்பர் மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாகவே இக்கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குகொண்டு தங்கள் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் யாழ். செயலகத்தில் இயங்கும் தொழில்துறைத் திணைக்களத்தில் இதற்கான விண்ணப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப்புமாறு மாவட்ட அலுவலர் பராகவன் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## ஆடி அமாவாசையை முன்னிட்டு கடைகளை பூட்டுமாறு கோரிக்கை

நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆடி அமாவாசை தினமன்று சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு, ஆடி அமாவாசைக் கடமைகளைச் செய்வதற்கு விடுமுறை வழங்கப்படவேண்டுமென யாழ். வணிகர் கழகம் சம்பந்தப்பட்ட வணிக நிலையங்களைக் கோரியுள்ளது. (எ-9)

## கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர் சங்க உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-9)

## கூட்டுறவு தினவிழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை26

திருகோணமலையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் நாளை நடத்தப்படவிருந்த கூட்டுறவு தினவிழா பின்பு ஒரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தலைமை அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

## சங்கக் கட்டடத்திற்கு காணி கொள்வனவு

மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் நிறுவதற்கு காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதென்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது. முன்பள்ளி, விளையாட்டுப் பூங்கா ஆகியவற்றையும் இக காணியில் அமைப்பது என்றும் சங்கம் தீர்மானித்துள்ளதாக சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் தெரிவித்தார். (3-135)

## கண்ணி மீட்ட பகுதியில் இரு மிதிவெடிகள் சிக்கின

தென்மராட்சி,ஜூலை26

சாவகச்சேரி கொடிகாமம் பகுதியில் உள்ள காணியில் மீளக்குடியமர்வதற்காக துப்பரவு செய்யப்பட்டபோது கிணற்றடியில் குவிக்கப்பட்டிருந்த மண்ணை வெட்டியவேளையில் அங்கு புதைக்கப்பட்டிருந்த இரு மிதிவெடிகள் மீட்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழன் மாலை இடம்பெற்றது.

இப்பகுதி ஏற்கனவே கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் துப்புரவு செய்யப்பட்டதையடுத்து வேலியினை துப்புரவு செய்ய ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

## மரம் கடத்தியவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை26

அனுமதிப்பத்திரம் இன்றி மரங்களை ஏற்றி வந்தவருக்கு யாழ். நீதிமன்றம் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த க.நிரா என்பவர் லொறி ஒன்றில் மரங்களை ஏற்றிவரும்போதே உரும்பிராயில் வைத்து கோப்பாய்ப் பொலீஸார் அவரைக் கைதுசெய்தனர். பின் யாழ் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட நபருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம் மரங்களை அரசாங்க மரக்கூட்டுத் தாபனத்தில் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டது. (3-6-ரி)


## பிறிமா இறைச்சிக்கோழிகள்

பிறிமா பொதிசெய்யப்பட்ட இறைச்சிக் கோழிகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக் கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
பிறிமா
144, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 071 2347730

(20492) (21-24-19-15)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY



BIRTHDAY

சிவன் - குணதயா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### கஜானனன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.07.2003) சனிக்கிழமை இத்தாலியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பம்மா, அம்மம்மா, தத்தாமார், பெரியம்மாமார்கள், பெரியப்பாமார்கள் மற்றும் அத்தைமார்கள், மாமன்மார்கள், அண்ணாமார், அக்காமார்கள், மச்சாள்மார்கள், மச்சான்மார்கள் அனைவரும் கஜானனனை சகல செல்வங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை. (20613) (24-19-15) தகவல்: மாமா.

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 10 - 1969



அந்தியம் அழிவு 26 - 07 - 1989

### செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார்

(பழைய மாணவன் - யா/ஹாட்லிக் கல்லூரி, யா/நெல்லியடி ம.ம.வி.)

எங்கள் அன்புச் செல்வமே தம்பி!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அக்கா,
அத்தான், மருமகன்.

'முத்துமாளிகை'
பருத்தித்துறை.

(20596) (25-24-19-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 02 - 1937



மறைவு 26 - 06 - 2003

### அமரர் செல்லத்துரை கனகராசா

முப்பத்தொரு நாளாச்சோ நீர் எமை விட்டுப்பிரிந்து
ஆண்டு பல சென்றாலும் உங்கள் நினைவு மாறவே மாறாது.
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (26.07.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, அன்று நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகை அம்மன் கோயில் வீதி,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(20568) (25-24-19-15)

- குடும்பத்தினர்.

# அதிகாரமற்ற ஆணைக்குழுவினால் நாட்டில் ஊழலை ஒழிக்க முடியுமா?

**"லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து இன்று அரசியல் அரங்கில் பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. அது தொடர்பான அரசமைப்புச் சிக்கல் குறித்த விவரங்களை இக்கட்டுரை வாயிலாக வெளிப்படுத்துகின்றார் கட்டுரையாளர் சீ.ஜே.அமரதுங்க. 'லங்காதீப' ஞாயிறு பதிப்பில் வெளியான அவரது கட்டுரையின் தமிழ் வடிவம் இது."**

நாட்டில் இன்று பெருமளவில் அதிகரித்துக் காணப்படும் ஊழல் மற்றும் லஞ்ச நடவடிக்கைகளை ஒழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு பல மாத காலமாக எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடாதநிலை நிலவுகிறது. அதனை இயங்கவைப்பதற்கு அரசமைப்புச்சபை இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. இதனால் ஆணைக்குழு விசாரணைகளும் இடைநிறுத்தப்பட்ட நிலையில் உள்ளன.

சுயாதீன ஆணைக்குழுச் சபையை உருவாக்கும் சட்டமூலங்களின் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதமானவை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள நூற்றுக்கு இருபத்தைந்து விகிதமானவை அரசினால் நிறைவேற்றப்படுமென இன்றைய பிரதமரும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராயும் இருந்த ரணில் விக்கிரமசிங்க 2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. தகுதிகாண் அரசு, சுயாதீன ஆணைக்குழு தொடர்பான சட்டமூலங்களைச் சமர்ப்பித்து அதனைச் சகல அரசியற்கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றிய சமயத்தில் தெரிவித்திருந்தார்.

அவரது உரைமூலம் எதிர்காலத்தில் நாட்டில் சுயாதீன ஆணைக்குழு குறிப்பிட்ட துறையில் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்ற நம்பிக்கை உறுதியாயிற்று. அதன் மூலம் இந்நாட்டில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்படுமென அவ்வேளையில் பொதுமக்கள் உறுதியாக நம்பினர்.

அப்போது நிறைவேற்றப்பட்ட சட்டவிதிகளின்படி ஊழல் மற்றும் லஞ்சவிசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரம் அரசமைப்புச் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அரசமைப்புச் சபையில் அப்பதவிக்கெனப் பிரேரிக்கப்படும் பெயர்ப்பட்டியல் நிறைவேற்றப்படுமிடத்து ஜனாதிபதி அந்நபர்களை நியமனம் செய்தல் வேண்டும். இம்முறை, முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையைவிட வெற்றியளிப்பதொன்றாய் அமையுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சகல எதிர்பார்ப்புக்களையும் புறந்தள்ளி லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தற்போது தனது நடவடிக்கைகளில் நலிவு கண்டுள்ளது. அந்த ஆணைக்குழுவில் காலியாகவுள்ள ஒரு வெற்றிடத்தை நிரப்ப முடியாதநிலை நிலவுவதால், கடந்த ஆறு மாதகாலமாக ஆணைக்குழுவின செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஐந்நூறு வரையிலான முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று விசாரணைகள் முடிவடைந்த நிலையிலுள்ள 58முறைப்பாடுகளின் மீதான சட்டநடவடிக்கைகளைத் தொடர முடியாதுள்ளது. இந்த முறைப்பாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்டோரில் சுங்க உத்தியோகத்தர்களும், உயர் பொலீஸ் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர். இதனால் குறிப்பிட்ட நபர்கள் தமது பதவிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையிலுள்ளதாகத் தெரியவருகின்றது.

விசாரணை ஆணைக்குழுவினரால் இடைநிறுத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளிடையே அமைச்சரவையில் பதவிவகிக்கும் ஏழு அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் அடங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. அத்துடன், விசாரிக்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுடன இனிமேல் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது ஆணைக்குழு செயற்படாத காரணத்தால், செய்யப்படவேண்டியுள்ள முறைப்பாடுகளின தொகையும் அதிகரிக்கக் கூடுமென்பதை கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இதனிடையே லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் மேன்மேலும் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றை ஒழிப்பதற்கான சட்டதிட்டங்களும், நடைமுறைகளும் நலிவுற்றுள்ளமையே இதற்கானதொரு காரணமெனவும் ஊகிக்க வேண்டியுள்ளது.

தற்போதைய லஞ்ச ஊழல் ஆணைக்குழுச்சபை மசோதா 1994ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட வேளையில் அது குறித்து பொதுமக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு காணப்பட்டது. அவ்வேளை பதவியிலிருந்த பொ.ஐ.முன்னணி அரசின் பொதுத் தேர்தல் வாக்குறுதிகளில் லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகளை ஒழித்தலென்பதும் ஓர் அம்சமாக இடம்பெற்றிருந்தது.

லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் சம்பந்தப்படும் அரசியல்வாதிகளை காலிமுகத்திடலில் பொதுமக்களது பார்வைக்காக நிறுத்திவைப்பதாக பொதுத்தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசப்பட்டது. அவ்விதம் வாக்குறுதி வழங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசு, லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுச் சட்டமூலத்தை முன்வைத்த சமயம் அதற்கு எதிரணியினரின் ஆதரவும் கிடைக்கப்பெற்றது. அச்சட்டமூலம் நாடாளுமன்றத்தினால ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் லஞ்ச ஊழல்கள் நாட்டில் ஒழிக்கப்பட்டுவிடுமெனப் பலரும் நம்பினர். ஆனால், அவ்விதம் நிகழ்வுகள இடம்பெறவில்லை.

லஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்காக, அதிக அதிகாரங்கள் கொண்டதான ஆணைக்குழு உருவாக்கப்பட்டபோதிலும், பல ஆண்டுகள் கழிந்த நிலையிலும் எந்தவொரு பாரதூரமான ஊழல் குற்றச்சாட்டுகள் மீது வெற்றியளிக்கும் வகையிலான விசாரணைகளை மேற்கொள்வதில் ஆணைக்குழு வெற்றிபெறவில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், பாடசாலை அதிபரொருவருக்கெதிரான வழக்கொன்றை ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அது குறிப்பிட்ட சில பொருள்களை அதிபர் அன்பளிப்பு என்ற வகையில் பெற்றுக்கொண்டதான முறைப்பாடாய் அமைந்திருந்தது. பாரை, சுறா போன்ற பெரிய பெரிய மீன்களை வலை வீசிப்பிடிப்பதற்கு முயலாமல் நெத்தலி மீன்களைப் பிடிப்பது போன்ற இந்நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையையடுத்து ஆணைக்குழு தானாகவே விசாரணையைக் கைவிட நேர்ந்தது.

திறைசேரியின் முன்னாள் செயலாளரான ஆர்.பாஸ்கரலிங்கத்துக்கு எதிரான விசாரணைகளின்போது, இந்த லஞ்ச ஊழல் விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து மற்றொரு பிரச்சினை உருவாகியது. பாஸ்கரலிங்கத்துக்கு எதிராக சட்ட நடவடிககைகளை மேற்கொள்ள விசாரணைக் குழு முயன்றவேளை, பாஸ்கரலிங்கம் உயர்நீதிமன்றத்தில் எதிர்மனுவொன்றைத் தாக்கல் செய்தார். அவருக்கு எதிரான விசாரணைகளின் போது ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்களும் இடம்பெற்றிருக்காமை காரணமாக அவ்விசாரணைகள் சட்டபூர்வமானவையல்ல என்பது அவர் தரப்பு வாதமாய் அமைந்திருந்தது. உயர் நீதிமன்றமும் அவரது தரப்பு வாதத்தை ஏற்று அவருக்கு சார்பாகவே தீர்ப்பளித்தது. இதன் காரணமாக பாஸ்கரலிங்கத்தால குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுபடமுடிந்தது. தற்போது அவர் இப்போதைய அரசின் ஆலோசகராகக் கடமையாற்றி வருகின்றார்.

எவ்விதப் புறத்தலையீடுகளுமின்றிச் சுதந்திரமாக நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய வகையில் தம்மிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே இந்த லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இது தொடர்பான அவசிய அதிகாரங்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், அதன் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு தொடர்ந்து இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாயுள்ளது. அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் இந்த ஆணைக்குழுவை தமது கைப்பொம்மை போன்று பயன்படுத்தி வருவதாக, இடம்பெற்ற சில நிகழ்வுகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாயுள்ளது. இவ்வகைச் சம்பவமொன்றில், ஆணைக்குழுவினால் பேணப்படவேண்டிய ரகசியம் பேணும் நடவடிக்கை அக்குழுவின் ஆணையாளரொருவரால் மீறப்படும் வகையில் குறிப்பிட்ட ரகசியத் தகவல் அந்த ஆணையாளரால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விவரம் வெளிவந்துள்ளது. இதனால் இந்த ஆணைக்குழு மீது சுமத்தப்பட்ட அரசியல் நெருக்குதல் போன்றே, அதன் செயற்பாடுகளுக்கான பிரச்சினைகளும் விரிவாக வெளிவந்துள்ளன.

அரசியல் நிர்வாகத்துக்கும், ஊழல் மற்றும் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கும் இடையேயான இவ்வகைச் சிக்கல்களால் பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்தில் லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின செயற்பாடுகள் நலிவுற்றன. புதிதாக ஆணையாளர்களை நியமிக்கும் நோக்கில் ஆணைக்குழுவில் அச்சமயம் உறுப்பினர்களாயிருந்த ஆணையாளர்களைத் தம் பதவிகளை ராஜினாமாச்செய்யுமாறு ஜனாதிபதி வற்புறுத்தி வந்தமையே இப்பின்னடைவுக்கான காரணமாகும். இதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எவரும் ஒப்புக்கொள்ளவில்லை. இதன் காரணமாக ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த பொலீஸ் அதிகாரிகள் விலக்கிக்கொள்ளப்பட்டனர். இதனால் தம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணைக்குழுவினால் இயலாமற்போனமையால் அதன் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இவ்விதம் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தமுடியாது போனமைக்கான காரணம், ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரீ.என். அபேவீர காலமானமையேயாகும். இதனால் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. விசாரணை நடவடிக்கைகளில் ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்களும் சமுகமளிக்க வேண்டியது அவசியமென, பாஸ்கரலிங்கத்தின் விசாரணை தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாகவே இவ்விதம் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் செயலிழந்து போயின.

உருவாகியுள்ள இச்சிக்கல் நிலை தொடர்பாக இந்த அதிகாரசபையின் தலைவரான முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்தகுமாரசாமி ஜனாதிபதிக்கு கடிதமூலம் அறிவித்த போதிலும், அதற்குரிய பதில் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை.

எவ்வாறானபோதும், ஆணைக்குழுவில் காலியாகவுள்ள ஓர் இடத்துக்கு முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பதன் மூலம் நிரப்பிக்கொள்ள கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசமைப்புச்சபை தீர்மானித்தது. ஆனால், குறிப்பிட்ட அந்நபருக்கு எதிராக அமைப்புக்களும், தனிப்பட்ட 30வரையிலான பொதுமக்களும் அரசமைப்புச்சபைக்கு குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பித்தமையால், அந்நியமனம் கைவிடப்பட்டது.

அடுத்து, முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகப் பணிபுரிந்த தமிழரொருவரின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. மாகாண ஆளுநராகவும் கடமையாற்றிய அவர், அரச சேவை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியவராவார். அவர் நிர்வாகத்துறையில் நற்பெயரீட்டியவர்.

அவரின் பெயர் அரசமைப்புச் சபையின் ஏகமனதான தீர்மானமாகப் பிரேரிக்கப்பட்டது. இதற்கு பிரதமர் போன்றே எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் ஆதரவு தெரிவித்திருந்தார். ஆனால், இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டுவந்த - இந்த ஆணைக்குழுவின் அங்கத்துவம் கோரி விண்ணப்பிக்கும் சமயம் பின்பற்றப்பட்டுவந்த நடைமுறையைப் பின்பற்ற அவர் விரும்பாமையால், இந்நியமனவிடயத்திலும் பிரச்சினை தலைதூக்கியது. தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் தாம் அப்பதவியை ஏற்கத் தயாராயிருப்பதாகவும், ஆனால், அப்பதவியைப் பெற்றுகொள்ளும் பொருட்டு தான் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமெதுவும் தமக்கு எழவில்லையென அவர் தெரிவித்திருந்தார்.

ஆணைக்குழு நியமனத்துக்கான விண்ணப்ப நடைமுறை தொடர்பாகவும் பிரச்சினை கிளப்பப்பட்டது. அவ்வாறு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பத்தில் விண்ணப்பதாரி தனது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்துடன் தனது மனைவியின் வசமுள்ள நகைகள் பற்றியும், தமது பிள்ளைகளின் பெயரிலுள்ள வங்கிச் சேமிப்புக்கணக்குகள் பற்றிய விவரங்களையும் வெளியிடவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரண பொது மகன் ஒருவரிடமோ அல்லது அரசியல்வாதி ஒருவரிடமோ இவ்வகை விவரங்கள் கோரப்படுவதற்கும், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றமொன்றின் முன்னாள் நீதிபதி என்பதோடு நாட்டின் மதிப்புமிக்க பிரஜையாகக் கணிக்கப்படும் ஒருவரிடம் விவரங்கள் கோரப்படுவதற்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உள்ளன. அவ்வித்தியாசம் தொடர்பாக இச்சம்பவத்தின் மூலமாவது கவனம் செலுத்தப்பட்டால் அது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்நிலை தொடர்பாக கவனம் செலுத்திய ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறையில் மாற்றங்கொண்டு வருவது தொடர்பாக ஆராயுமாறு அரசமைப்புச் சபையைக் கடிதமூலம் கேட்டுக்கொண்டார்.

அரசமைப்புச் சபையின் தலைவா போன்று கடமையாற்றும் சபாநாயகரிடம் இந்த யோசனையை ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் அபிப்பிராயங்களும் கோரப்பட்டுள்ளதாக செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அவ்விதம் புதிய நடைமுறை பேணப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு அது வழிவகுக்கும்.

இந்த ஆணைக்குழுவுக்கான சட்டவிதிகளின் பிரகாரம் இக்குழுவின் உறுப்பினராக உயர்நீதிமன்றம் மற்றும மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றி ஓய்வுபெற்ற நீதிபதிகளை மட்டுமே நியமிக்க முடியும். வேறெந்த வகையிலுமான நியமனங்கள் மேற்கொள்ள சட்டப்படி இடமில்லை. இவ்வகை முன்னாள் நீதிபதிகள் விடயங்களைக் கையாளக்கூடிய வகையில் அனுபவம் உடையவர்களாய் இருந்து வருவது வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்களில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதாயின் அதற்கு சிறப்பான நடைமுறையொன்று பின்பற்றப்படுதல் பொருத்தமாய் அமையும்.

இந்நாட்டு மக்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு ஆளாகியுள்ள இந்த விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இவ்விதம் நீண்ட காலமாகத் தடைப்பட்டுள்ளமை அபாயகரமானதாகும். நாட்டில் இன்று பெருகிக் காணப்படும் இந்த லஞ்ச ஊழல் நடவடிக்கைகளால் பொருளாதாரத்துக்குப் பெரும் கேடு விளைந்துள்ளது. பொதுமக்களது நிதி வீண்விரயம் செய்யப்படுகிறது. பொருளாதாரத் துறையின் சகல பிரிவுகளிலும் பொறுப்பற்ற தன்மை விரவிக் காணப்படுகிறது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின் லஞ்ச மற்றும் ஊழல் நடவடிக்கைகள் முற்றாக ஒழிக்கப்படல் அவசியமாகும் இதற்கான நடவடிக்கை இயந்திரம் திறமையுடன் செயற்படுத்தப்படல் வேண்டும்.

பொதுமக்களுக்கு மிக அவசியமான தேவையாயுள்ள போதிலும், இந்த ஊழல் மற்றும் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு எதிராக பரந்த எதிர்ப்பு நிலையும் காணப்படுவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ள குழுக்களின் அதிகாரத்தனத்தின் விளைவினால் ஏற்படுவதாகும்.

இதுவரையில் இந்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஏழு அமைச்சர்களுக்கெதிராகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதேபோன்று பொலீஸ் துறை, சுங்கப்பகுதி மற்றும் அரச துறைகளைச் சார்ந்த உயர் அதிகாரிகளுக்கெதிராகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றினிடையே பெறுமதியான சாட்சியங்கள் கொண்ட முறைப்பாடுகளும் அடங்கியிருக்கக்கூடும். அந்த அளவுக்கு லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இவ்விதம் தடைப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடையும் கூட்டத்தினரின் தொகையும் அதிகரிக்க இடமுண்டு.

இது ஒரு பரந்த பலம் வாய்ந்த முயற்சியாகும். இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை குழப்புவதற்கான எதிர்பார்ப்புகளாயும் அமையக்கூடும். ஆகவே, ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்பதைப்போன்று அதன செயற்பாடுகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தவும் விசேட கவனம் செலுத்தப்படல்வேண்டும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசமைப்புச்சபை மீதும் ஜனாதிபதியின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. ◆

**வீயெஸ்ரீ**

சைவ பரிபாலனசபை நடத்திய

## சித்தாந்த பண்டிதர் பட்ட பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சைவசித்தாந்த பிரவேச பண்டிர் பரீட்சையில் செல்லப்பு திருவிளங்கம் (அராலி) 2ஆம் பிரிவிலும்-

சைவசித்தாந்த பாலபண்டிதர் பரீட்சையில் சசிலேகா கனகசுந்தரம் பிள்ளை(பருத்தித்துறை) 3ஆம் பிரிவிலும்-

சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சையில் கிருஷ்ணபிள்ளை கந்தவேள் (சாவகச்சேரி - 2ஆம் பிரிவு), கதிரமலை கவிதா (கோண்டாவில் - 2ஆம் பிரிவு), குமாரசாமி சுமுகலிங்கம் (பூநகரி - 2ஆம் பிரிவு), கலைச்செல்வி கந்தசாமி (சுழிபுரம் - 3ஆம் பிரிவு), துளசிமலர் வைத்தி(சாவகச்சேரி - 3ஆம் பிரிவு), நாகறஜனி முருகையா (புத்தூர் - 3ஆம் பிரிவு), க.புஸ்பரேகா(நீர்வேலி - 3ஆம் பிரிவு) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி சித்திபெற்றவர்களுக்கான பெறுபேறுகள் யாவும் தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மிருகசீரிட நட்சத்திரம், 35 வீதம் பாவமுள்ள, A/L, Computer, 5 அடி உயரமான மணமகளுக்கு எஞ்சினியர், B.A., B.Sc. ஆசிரிய மணமகன் தேவை. தொடர்பு: முருகன் திருமண சேவை, நவாலி கிழக்கு, மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை (எம்மிடம் உள்நாடு, வெளிநாடு குறிப்புகளும் உண்டு).
(20637)

இந்து கௌரவ குடும்ப, 29 வயது, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு கிரகபாவம் 108, மக நட்சத்திரம், 2ஆம் பாதம், அரச / கூட்டுத்தாபன சேவையிலுள்ள, தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 1952, C/o உதயன், யாழ்ப்பாணம். (20154)

## சோதிடம்

கல்வி, தொழில், திருமணம் சம்பந்தமான உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே தரப்படும். திருமணத்துக்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு.. தொடர்பு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி ஸ்ரூடியோ முன்பாக). (20679)

## இசைக்குறிப்புகள்

ஓகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம் 1-10) வெளிவந்துள்ளன. தொடர்பு: 75, கோயில் வீதி (நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து 500 m தெற்கே).T.P.: 0777 031293 (பதிவுத்தபாலிலும் பெறலாம்).
(20548)

## இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவைப்படுகின்றன. உடன் தொடர்பு கொள்ளவும் இல.19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(20630)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima கோழித்தீன் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும் பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். உங்கள் பதிவுகளை 31.07.2003இற்கு முன் புதுப்பிக்கவும். தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர்.
(20598)

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள் 04.08.2003 பிற்பகலில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20701)

## இறைச்சிக்கோழிகள்

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(20702)

புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். சுத்தம்செய்தல் இலவசம். (20673)

## தவறிவிட்டது

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை குமாரகுலசிங்கம் என்பவருடைய தேசிய அ.அ. (இல.442763119V), சில முக்கிய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரில் ஒப்படைத்துதவவும். (20707)

## விற்பனைக்கு

CD 125 Twin மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 30, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (நமசிவாய பாடசாலை முன்பாக).
(20690)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள லேனில் 10 பரப்புக்காணியுடன், நல்ல நிலையில உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பேர்ள் றிச். T.P.: 222 2882 (20685)

## இரத்த அழுத்தக் கருவி அன்பளிப்பு

பிரிட்டனில் வதியும் கொடிகாமம், அல்லாரை வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இரத்த அழுத்தப் பரிசோதனைக் கருவியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சாந்தீஸ்வரன் சோபனா என்ற அப்பெண்மணி நேரில வருகைதந்து ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் இக்கருவியைக் கையளித்தார்.(ஒ-117)

## கண்ணீர் அஞ்சலி

MF TRACTOR ENGINEERS முன்னாள் உரிமையாளர்

**இராஜதுரை மாணிக்கசிங்கம்**

அவர்கள் 24.07.2003 அன்று கொழும்பில் காலமானதையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் [illegible]வித்துக்கொள்வதுடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் கா[illegible]கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்தி[illegible]ன்றோம்.

MF Tractor Engineers,
Kannathiddy. (2075) (25-24-11-15) - ஊழியர்கள்.

# வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணைக்கு வேலை ஆள்கள் தேவை. ஊக்கமாக வேலை செய்பவர்களுக்கு நல்ல சம்பளமும், உணவும் தரப்படும். தங்கியிருத்தல் வேண்டும். உடன் நேரில் வரவும்.

**தனபாலசிங்கம்**
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர், ஒழுங்கை,
முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

(20699) (24-11-15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று
(26.07.2003)
சனிக்கிழமை
யாழ்ப்பாணம்
வீரசிங்கம்
மண்டபத்தில்
நாட்டிய
அரங்கேற்றம்
காணும்
எமது
மருமகள்களான

**செல்வி மீரா கணேஸ்வரன்**
**செல்வி நிலானி கணேஸ்வரன்**


ஆகியோர் பரத நாட்டியக் கலையில்
சிறந்த நர்த்தகிகளாக விளங்கி சீருஞ்சிறப்பும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என
வாழ்த்துகின்றோம். (24-11-15)

(20704)


நுணாவில் மேற்கு, சாவகச்சேரி திரு.திருமதி கந்தராஜா குடும்பத்தினர்.
மறவன்புலோ, சாவகச்சேரி திருமதி குமரேஸ்வரன் குடும்பத்தினர்.


BPL

வர்ண டெலிவிஷன்கள்
சன்யோ தொழில்நுட்பத்துடன்



**நீங்கள் இதுவரை கண்டிராத காட்சிகள் !**
**கேட்டிராத நாதங்கள் !**




- 1000W PMPO ஒலி
- உடனடி காட்சிகள்
- AV ஸ்டீரியோ
- ஸ்டீரியோ இரட்டை ஸ்பீக்கர்கள்

- 40W PMPO ஒலி
- அகன்ற துல்லிய காட்சிகள்
- 100 நிகழ்ச்சிகள்
- VMT-DVD/LD/VCD







- 16W PMPO ஒலி
- 100 நிகழ்ச்சிகள்
- ஹைப்பர்பேண்ட் கேபிள்
- AV IN

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:

**சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10, தொலைபேசி: 324261- 5, 357283-5, 431770

விநியோகஸ்தர்: நாராயணா ஹாட்வெயார்ஸ் டிரேடர், யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:

V.K. ராஜரட்னம் & சன்ஸ், யாழ்ப்பாணம். N.S.A எலக்ரோனிக், யாழ்ப்பாணம்.
கரன் வோச் & ரேடியோ, யாழ்ப்பாணம். ஹீரோ சுப்பர் கொம்பிலக்ஸ், நெல்லியடி.
SKY எலக்ரோனிக் சிஸ்டம்ஸ், யாழ்ப்பாணம். ராஜன் சைக்கிள் வேர்க்ஸ், பருத்தித்துறை.

# சாஸ்திரியம் அறியாதவர்களும் ரசிக்கும் மரபு ஒழுங்குடைய கிராமிய நடனங்கள்

வலன்ரீனா இளங்கோவன்
ஆசிரியை,
கொக்குவில் இந்துக் கல்லூரி

எந்த ஒரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்நாட்டிற்குரிய கலையினை நாம் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கின்றோம். அந்த வகையில் நடனக்கலை பற்றி எடுத்து நோக்கும்போது, அந்நாட்டிற்கு உரித்தான கலாசார சாஸ்திரிய செந்நெறி நடனங்கள் (Classical Dances), அந்நாட்டிற்கே உரித்தான கிராமிய நடனங்கள் (Folk Dances) என இரண்டாக வகுக்கலாம். இவ்விரண்டு நிகழ்த்துக் கலைகளிலும் (Performing Arts) சாஸ்திரிய கலாசார நடனங்களை அத்துறையில் ஆழ்ந்த அறிவுள்ள சிலரால் மட்டுமே ஆழமாக இரசிக்க முடியும். மற்றவர்களால் மேலோட்டமாகவே ரசிக்க முடியும். ஆனால், சாதாரண பாமர மக்களாலும், பெரும்பான்மையான சமூக வர்க்கத்தினராலும் ரசிக்கக்கூடியவை கிராமிய நடனங்கள் என்கின்ற ஆடல் வடிவங்கள் ஆகும். பரதநாட்டியம், கதகளி, கதக், ஒடிசி, மணிபுரி, குச்சுப்பிடி போன்ற சாஸ்திரிய நடனங்களுக்கு ஆடல்முறை, பக்கவாத்தியம், இசை


புரவியாட்டம்

என்பவற்றுக்கு ஓர் ஒழுங்குமுறை உண்டு. அதேபோன்று, கிராமிய நடனங்களுக்கும் மரபுரீதியான ஆடல் முறை, பக்கவாத்திய இசை என்பன உள்ளன.

இக்கிராமிய நடனங்கள் இயற்கைப் பாங்கினை, காலநிலையினை, சமய, சமூக, பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை, நிகழ்வுகளை பின்னி வளர்க்கப்பட்டு வந்த ஆட்டமுறைகள் ஆகும் எனக் கூறப்படுகின்றது. இந்த வகையில் கிராமிய நடனங்கள் எனக்கூறப்படும் ஆட்டங்கள் பல வகைப்படும். அவற்றுள் பொய்க்கால் குதிரையாட்டம்(புரவியாட்டம்), மயிலாட்டம், ஒயிலாட்டம் (ஒயில் கும்மி), மானாட்டம், புலியாட்டம், பொம்மையாட்டம்(உடக்கு பொம்மையாட்டம்), நிழலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், வாளாட்டம், தீப்பந்தாட்டம், தேவராட்டம், சிலம்பாட்டம், குறவன் குறத்தியாட்டம், (குருவிக்காரன் ஆட்டம்), மாரடிப்பாட்டம், காவடியாட்டம், தாளக்காவடியாட்டம், மகுடாட்டம் (கணியான் கூத்து), கோலாட்டம், பின்னல் கோலாட்டம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சில ஆட்டங்கள் பற்றி நோக்குவோம்.

### புரவியாட்டம்
### (பொய்க்கால் குதிரையாட்டம்)

இந்தியாவின் தென்னாடு முழுமையும் பரவியிருக்கும் கவர்ச்சிகரமான ஒரு கிராமிய நடனம் "புரவி ஆட்டம்" ஆகும். இது கோயில் விழாக்காலங்களிலும் திருமண ஊர்வலங்களிலும் ஆடப்படுகின்றது. தமிழ் நாட்டிற்கே உரித்தான இந்நடனத்தை மூங்கில், சணல், காகிதம், கண்ணாடி, துணி என்பவற்றால் செய்யப்பட்ட குதிரைக் கூட்டு வடிவத்தின் மையத்தில் நின்று ஆடுவது மரபு. குதிரை சுமார் 120 கும். இந்த ஆட்டத்திற்குரிய உடை வசீகரமான வர்ணத்துணிகளில் அமைக்கப்பட்டிருக்கும். இந்த ஆட்டத்தை ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஆடுவார்கள். இந்த ஆட்டத்திற்கு நீண்ட நிறைந்த பயிற்சி வேண்டும்.

ஆட்டம் நடக்கும் திடலில் தேள், பாம்பு முதலியன இருந்தால் ஆட்டக்காரருக்கு அவற்றால் எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது என்பதற்காக 1 1/2 அடி நீளமான மரக்கட்டைகளைக் காலில் கட்டிக்கொண்டு ஆடும் வழக்கம் உண்டாயிற்று.

இவ்வாட்டம் சிலப்பதிகாரத்தில் மாதவியாடிய 11ஆடல்களுள் ஒன்றான 'மரக்கால் ஆட்டம்' எனக் கூறப்படுகின்றது. துர்க்கையை நேரடியாக வெல்லமுடியாத அசுரர் வஞ்சனை நோக்கில் துர்க்கை மீது பாம்பு, தேள் ஆகியவற்றை ஏவ சினங்கொண்ட துர்க்கை மரக்கால் பூண்டு ஆடிய ஆட்டமாக இம்மரக்கால் ஆட்டம் குறித்து சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. இந்த ஆட்டத்திற்கு தவில், நாதஸ்வரம் என்பன பயன்படுத்தப்பட்டது. தற்போது பாண்ட் (Band) இசையும் பயன்படுத்தப்படுகின்றது. இது ஹாசிய ரசத்தை ஊட்டும் நடனமாக அமைகின்றது. இந்த ஆட்டத்தில் புராணக்கதை, சத்திரபதி, சிவாஜியின் வீர வரலாறு போன்ற கதைகளையும் நடிப்பதுண்டு.

இப்புரவியாட்டம் சோழர்களால் தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்டது. தஞ்சையில் ஆரம்பமாகிய இவ்வாட்ட முறையானது நாளடைவில் தென்னிந்தியா முழுவதும் பரவிப் பின்னர் இலங்கையின் வடபகுதியிலும் ஓரளவு பிரபல்யம் அடைந்தது. குறிப்பாக கோயில் உற்சவங்களில் இன்றும் இவ்வாடல் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

### மயிலாட்டம்

புரவியாட்டத்திற்குரிய குதிரையைப் போலவே மயிலாட்டத்திற்கும் மயில் உருவகம் செய்து ஆடுவதே கிராமிய நடன மரபாக இருந்து வருகின்றது. இந்த ஆட்டத்திற்கும் சணல், மூங்கில, காகிதம், துணி, கண்ணாடி என்பனவற்றுடன் மயில் தோகை என்பன கொண்டு அமைக்கப்பட்ட கூட்டின் மத்தியில் முருகக்கடவுள்போல் வேடமிட்டோ அல்லது புரவி ஆட்டம் ஆடுபவர்கள்போல் வேடமிட்டோ ஆண்களும் பெண்களும் இந்த ஆட்டத்தை ஆடுவார்கள்.

புரவியாட்டத்திற்கு கையாண்டதிலிருந்து சில வேறுபட்ட உத்தி முறைகளையும் ஜதிகளையும், அசைவு முறைகளையும் இவ்வாட்டத்திற்கு கையாளவேண்டும். கிராமிய நடனங்களுள் ஒன்றான இம்மயிலாட்ட முறையானது சாஸ்திரிய நடன வகைகளான பரத நாட்டியம், கதகளி என்பவற்றில் இருக்கும் மயில் ஆட்ட முறைக்கு முற்றிலும் வேறுபட்ட ஓர் ஆடல் வடிவமாகும். இவ்வாட்டத்திற்கு புராணக் கதை, வள்ளி திருமணப் பாடல்கள் மற்றும் கிராமிய மெட்டுப் பாடல்களுடன் பொதுவான பாடல்களும் பாடப்படுவதுமுண்டு. உறுமி மேளம், நாதஸ்வரம், தவில், ஜாலரா (தாளம்) போன்ற வாத்தியங்கள் வாசிக்கப்பட ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தஞ்சையில் பெரிதும் வழக்கில் இருந்தது. தஞ்சைப் பெருங்கோயிலில் இருந்த தேவதாசிப் பெண்கள் இவ்வாட்டத்தை ஆடினார்கள் எனக் கூறப்படுகின்றது. இக்கிராமிய நடனமானது எமது நாட்டில் சின்னமேளப் பாரம்பரியம் இருந்த


மயிலாட்டம்

காலத்தில் சின்னமேளம் ஆடிய பெண்களால் கோயில் திருவிழாக்களின் போது ஆடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

### ஒயிலாட்டம்

இது ஒயில், கும்மி என்றும் அழைக்கப்படும். ஆண்களால் ஆடப்படுகின்ற கிராமிய நடனங்களுள் ஒயிலாட்டமும் ஒன்றாகும். இது கிராமத்துக் கோயில் திருவிழாக் காலங்களில் நிகழ்த்தப்பட்டது. சில சமயங்களில் கேளிக்கைக்காகவும் இது நிகழ்த்தப்பட்டது. இந்தக்குழு பொதுவாக 12 முதல் 20 ஆண்களைக் கொண்டதாக இருக்கும். இவ்வாட்டக்காரர்கள் கையில் கைக்குட்டைகளை வைத்து நடனம் ஆடுவார்கள். இதனால், இவ்வாட்டத்தை லேஞ்சி ஆட்டம் எனவும் கூறுவர்.

இவ்வாட்டத்தை ஆடுபவர்கள் கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு புராண, இதிகாச கதைப்பாடல்களுக்கு ஏற்ப ஆடுவது மரபு. முதலில் பாடப்படும் பாடல் பிரார்த்தனையோடு நின்றுவிடாது அதில் கலந்துகொள்பவர்கள் ஒருவர் கால்களுடன் ஏனையோரின் கால்கள் மோதுவதைத் தவிர்க்க இடைவெளிவிட்டு ஒவ்வொருவரும் நிற்கவேண்டும் என்ற அறிவுறுத்தலும் பிரார்த்தனைப் பாடலில் இருக்கும்.

இந்நடனத்தை ஆடும் குழுவினர், ஒரே நேர்கோட்டில் அழகாக நின்று ஆடுவர். இவ்வாட்டத்திற்கு டோலக், ஜாலரா என்பன இசைக்கப்படும். "வாத்தியார்" என்ற ஒருவர் இந்த ஒயில் குழுவினருக்குப் பயிற்சியளிப்பார். ஆட்டத்தில் இவரும் முக்கிய பங்கு வகிப்பார்.

இந்நடனம், பல இரவுகள் தொடர்ந்து இது திறந்த வெளியில் ஆடப்படும். பாட்டின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அங்கங்களின இயக்கமும் விரைவுபெற்று ஆண்மையின் அழகு தோன்ற நடனம் நிகழ்த்தப்படும். இக்கலை திருச்சி, மதுரை, கோவை போன்ற மாவட்டங்களில இன்றும் வழக்கில் உள்ளது.

இந்நடனமானது இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றது. இந்தியாவில் இருந்து சிமெந்து தொழிற்சாலை கட்டிய போது தொழிலாளியாக வந்த கேசவன் என்பவர் மயிலிட்டி தெற்கு, கட்டுவன் பகுதி ஆட்டக்காரரான குருசாமி உள்ளிட்ட 12 பேருக்கு பழக்கினார். அத்துடன் 'வசந்தன் அடி' எனப்படும் வசந்தன் கூத்தையும் பழக்கினார்.

குருசாமி குழுவினரால் கட்டுவன் ஞானவைரவர் கோயில், முத்துமாரியம்மன் கோயில், குரும்பசிட்டி முத்துமாரியம்மன், புளியடி வைரவர் கோயில் போன்ற ஆலய திருவிழா நிகழ்வுகளின்போது இவ்வாட்டம் ஆடப்பட்டு வந்தது. தற்போதும் விழாக்களில் ஆடப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்து நாட்டக்கூத்துக் கலைஞனான மெற்றாஸ்மெயில் மற்றும் யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் இவர்களிடம் இவ்வாட்டத்தைப் பழகி அவர்களைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

★

---

## சிங்கள மக்களாலும் ஜே.வி.பியாலும்
# தமிழர்களின் கைக்கூலி என்று விமர்சிக்கப்பட்ட எனக்கு யாழ். மாணவர்களின் எதிர்ப்பு வேதனையளிக்கிறது

### பல்கலைக்கழக சம்பவம் பற்றி ஜயலத் கூறுகிறார்

தமிழ் மக்களின் கைக்கூலியென சிங்கள மக்கள் பலரும் என்னை விமர்சிக்கின்றனர். நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றும்போது சில சமயங்களில் 'கொட்டி பந்தங்காரயா' புலிகளின் கையாளென ஜே.வி.பி. எம்.பிக்களால் விமர்சிக்கப்பட்டவன். இத்தகைய முத்திரைகள் குத்தப்பட்ட எனக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் காட்டிய எதிர்ப்பு மன வேதனையைத் தருவதாக உள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த புனரமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களை உத்தியோகபூர்வமாகக் கையேற்கும் வைபவத்தில் அமைச்சா ஜயலத் ஜயவர்த்தனவை கலந்துகொள்ளவிடாது யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தடுத்த சம்பவம் தொடர்பாக கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் 6 கோடி ரூபா நிதியுதவியுடன் வடபகுதியைச் சேர்ந்த 55 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு அவற்றுக்கான தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன. அக்கட்டடங்களின் திறப்புக்களை கையளிக்கும் வைபவம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியமே மேற்கொண்டது. அந்த அமைப்பின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு புனரமைப்பு "அமைச்சர் என்ற ரீதியில் நிகழ்வில் பங்குபற்றுவதற்கே நான் யாழ்ப்பாணம் சென்றேன்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் பாடசாலைகள் இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் என் மீது சுமத்தினர். அதைக் காரணங்காட்டி வைபவத்தில் பங்குபற்ற விடாது என்னைத் தடுத்தனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாடசாலைகள் விவகாரம் பாதுகாப்பு அமைச்சரையும், கல்வி அமைச்சரையும் சார்ந்தது. இதுவிடயத்தில் என்னில் அவர்கள் குற்றம் கண்டது நியாயமற்றது ஆகும் அதனை அவர்களுக்கு எடுத்துக்கூறியும் அவர்கள் அதை ஏற்காது என்னை வாகனத்தில் பலவந்தமாக ஏற்றி அனுப்பினர். பாடசாலைகளைப் புனரமைக்க உதவிய ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள் எனது வானில் ஏறி யாழ். ஜி.ரி.இசட் நிறுவனத்திற்கு வந்து வைபவத்தை நடத்தும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. இதனையிட்டு, எனது பணிகளை நான் இடைநிறுத்திவிடமுடியாது. வடபகுதி மக்களின் நலனில் அக்கறை கொண்டு அமைச்சராக அல்ல, ஓர் எம்.பியாக இருந்தபோதும் ஆர்வங்கொண்டு செயற்பட்டேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

---

# கழுத்தில் கம்பித்தடம் போட்டு கட்டாக்காலி மாடுகள் அபேஸ்!

### சுருவில் பகுதியில் திருடர்களின் புதிய உத்தி

யாழ்ப்பாணம்,ஜூலை26

புளியங்கூடல், சுருவில் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் வளர்ப்பு மாடுகளை கம்பித்தடத்தின் மூலம் திருடும் நடவடிக்கையில் திருடர் கும்பல் ஒன்று ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் இரவோடிரவாக இறைச்சிக்காக வெட்டப்பட்டு சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு கம்பித்தடத்தில் அகப்படுகின்ற சில மாடுகள் அந்தத் தடங்களை இழுத்து அறுத்துக்கொண்டு ஓடிவிடுவதாகவும் -

இதனால், கழுத்துப்பகுதியில் காயமடைந்த நிலையில் சில நாள்களின் பின்னர் குறிப்பிட்ட மாடுகள் இறந்துவிடுகின்றன என்றும் - அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

- இவ்வாறு இறக்கும் மாடுகளினாலும், சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளினாலும் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது - என்றும் கூறப்பட்டது.

(எ-4)

---

# மாகாண தமிழ்த்தினவிழா இந்து மகளிர் கல்லூரியில்

### இன்று பிற்பகல் 3மணிக்கு நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழித்தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், தமிழ்த்தின போட்டிகளின் சிறப்பு நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் 'கவின்தமிழ்' மலர் வெளியீடு என்பன இடம்பெறும்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சு.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலர் இ.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருமதி ஹேமந்தராணி தியாகலிங்கம் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளை வழங்குவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி கேட்போர்கூடத்தில் வடக்கு - கிழக்கு மாகாண நாட்டுக்கூத்து விழா நடைபெறும்.

வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், நாட்டுக்கூத்து போட்டிகளில் முதலிடம் பெற்ற நாட்டுக்கூத்து, இசைக்கருவிப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சி என்பன நடைபெறும்.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இந்நிகழ்ச்சிகளில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மாகாண மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் இம்முறையே முதன் முதலாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது

(எ-152)

# தவறிவிட்டது

25.07.2003 வெள்ளிக்கிழமை 10.00 மணியளவில் உரும்பிராய்க்கும் கல்வியங்காட்டுக்கும் இடையே பெறுமதி மிக்க பவுண் தாலிக்கொடி ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: **நியூ ராஜா சலூன்**
பிரதான வீதி,
சங்கானை.
தொ.இல.077-6095192

(C29143) (32-14-16)


# பேருந்து உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவம்

இரண்டாவது உலக இந்துமாநாட்டின் ஞாபகார்த்தமாக வடமராட்சிப் பாடசாலைகளின் தேவைகளுக்கும் பொதுவான இந்துசமய வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்துவதற்காக கௌரவ இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன் அவர்களால் வதிரி, கரவெட்டி, ஸ்ரீபரமானந்த ஆச்சிரமத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 50 இருக்கைகளைக் கொண்ட பேருந்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் நாளை (27.07.2003) ஞாயிறு காலை 9 மணி முதல் 10 மணி வரையில் எமது ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்துசமய அமைப்புக்கள் - நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வதிரி,
கரவெட்டி,
தொ.பே.இல: 021 - 2263136

தர்மகர்த்தாக்கள் சபை,
ஸ்ரீ பரமானந்த சிறார்
முதியோர் இல்ல ஆச்சிரமம்

(c/29134) (14-16-25)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை மின்சாரசபையில் மாகாண வழங்கல் கட்டமைப்புப் பொறியியலாளராகக் கடமையாற்றும் உயர்திரு. வி.வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (25.07.2003) வெள்ளிக்கிழமை தமது அறுபதாவது பிறந்ததின விழாவைக் கொண்டாடிய மகிழ்ச்சியான நன்னாளில் அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று நலமுடன் வாழ எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

நலன்புரிச் சங்கம்,
இ.மி.சபை,
வேலணை.

(20722) (14-16-32)

- மின் அத்தியட்சகர்
& மின் ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அலுவலர்
திரு.கோ.சண்முகலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**சுப்பர் கோபாலு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பிரதேச செயலகம்,*
*நெடுந்தீவு.*

(C/29137)(14-16-29)

- ஊழியர் நலன்புரிச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர்களாகிய
திருமதி தேவகலை லோகேந்திரன் அவர்களின் அன்புத் தாயாரும்,
திரு. கு.ஸ்ரீரங்கன் அவர்களின் அன்பு மாமியும் ஆகிய

திருமதி **ஏகாம்பரம் ஞானம்மா** அவர்கள்

இயற்கையெய்தியமையையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(14-16)(20723)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றும், நாளையும் காலை 9மணிமுதல் திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★அரியாலை ஐக்கிய வி.க. அணி எதிர் காங்கேசன்துறை ஐக்கிய வி.க. அணி

★நாயன்மார்கட்டு பாரதி வி.க. 'பி' அணி எதிர் புத்தூர் கலைமதி வி.க.'ஏ' அணி.

★நீர்வேலி ஐக்கிய வி.க. அணி எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. அணி. (எ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை26

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ்.மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு வதிரி பொம் மேர்ஸ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகமும் கொற்றாவத்தை சிவானந்த விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (எ-5-86)

★ ★ ★

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் சனசமூக நிலையங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

கரபந்தாட்டம், கிரிக்கெட், தாச்சி போன்ற விளையாட்டுப் போட்டிகளில இப்பிரதேசத்தைச் சேர்ந்த பல முன்னணி சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

தாச்சி போட்டிகளின் இறுதிக்கட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இணுவில் அண்ணா சனசமூக நிலைய மைதானத்திலும் -

கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன. கிரிக்கெட் ஆட்டத்தில் மயிலணி ஜனசக்தி சனசமூக நிலைய அணியினருடன் ஊரெழு கணேசா சனசமூக நிலைய அணியினரும் மோதவுள்ளன.

அதேவேளை -

மயிலணி ஜனசக்தி சனசமூக நிலைய அணியினருக்கும், ஏழாலை மத்தி சனசமூக நிலையத்தினருக்கும் இடையிலான கரபந்தாட்டப் போட்டிகள் ஜனசக்தி சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (எ-152)

## வட்டுக்கோட்டையில் கணனி பயிற்சி மையம்

யாழ்ப்பாணம் பயிலுநர் கைத்தொழில அதிகாரசபையினால் இளைஞர் யுவதிகளுக்கு கணனிப்பயிற்சி நிலையம் ஒன்று வட்டுக்கோட்டையில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென தொழில்திறன் மேம்பாட்டு நிதியம் 10 கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (எ-4)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் அம்பலவாணர்

**(ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியும் பிரபல ஜோதிடரும்)**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, தம்மளையை வசிப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அம்பலவாணர் அவர்கள் நேற்று (25.07.2003) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் பாலசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும் கௌரி (ஹற்றன்), பகீரதன் (நுவரேலியா), பிரகலாதன் (ஆஸ்திரேலியா), குமாரி (கோண்டாவில்), காலஞ்சென்ற காண்டீபன், திலீபன் (ஓமான்), குமணன் (இந்தியா), அல்லி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் சந்திரகுமார் (ஹற்றன்), அஜிந்தா (நுவரேலியா), வசந்தி (ஆஸ்திரேலியா), காந்தரூபன் (கோண்டாவில்), துர்க்கா (ஓமான்), தேன்மொழி (இந்தியா), ஆத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் T.சண்முகநாதன், திருமதி குலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சேனாதிராசா மற்றும் அபிராமி, கனகசுந்தரி ஆகியோரின் சகோதரரும் மயூரன், விதுரன், கபிலன், முகிலன், பைரவி, ஆர்த்தி, கீர்த்திகா, பீஸ்மன், அனுஜன், ஜானு, பிரவீன், அபிசேக், லாவன்ஜா, சிந்துஜா, நதியா, விதுஜா, சேரன், நிஜந்தன், அபினஜா, திவ்ஜா, யாழினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கோண்டாவில் கிழக்கிலுள்ள அவரது மகளது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேஷன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(20730) (14-16-32)

தகவல்:
கு.காந்தரூபன்.
(மருமகன்)

## விசுவநாதர் இராசேந்திரம்

(இளைப்பாறிய தபாலதிபர்; கோபாலகிருஷ்ணன் - கிளாக்கர்)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் இல. 177, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதர் இராசேந்திரம் அவர்கள் 24.07.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் நந்தகுமாரின் (கனடா) மைத்துனரும் தனலட்சுமியின் சகோதரரும் லீலாதேவியின் மைத்துனரும் பரமானந்தம் (சாமியார்) JP. அவர்களின் சகலனும் சரவணபவானந்தன் (பிரான்ஸ்), சதானந்தன் (கொலண்ட்), கிருபானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா), நித்தியானந்தன் (லண்டன்), மகானந்தன் (கனடா), லோகானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினிதேவி (பிரான்ஸ்), கௌரி (கொலண்ட்), வசந்தி (ஜேர்மனி), மாலா (பிரான்ஸ்), குணபாலசுந்தரம் (கனடா), விஜயந்தி (லண்டன்), சுகேந்திரனி (கனடா), விஜியகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமுதினி (பிரான்ஸ்), சாநதன், ராயு, செல்வி (கொலண்ட்), யாகுலன், பிரியந்தன், தனிர்னா (ஜேர்மனி), யோகன், சிந்து, மனுஷா, அனிதா (பிரான்ஸ்), றஜி, றொசான் (கனடா), நிருஷன், நிருபன் (லண்டன்), காயித்திரி,விதுஷா (கனடா), றஜீவன், மயூரன், அஜித்தன், விஜித்தன் (பிரான்ஸ்) ஆகியோரது பேரனும் நிவேதாவின் (பிரான்ஸ்) பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாண்டியன் தாழ்விலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*177, கொழும்புத்துறை வீதி,*
*பாண்டியன்தாழ்வு.*

(20724)(14-16)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## குமாரு கந்தையா

**(ஓய்வுபெற்ற புகையிரத சீட்டுப் பரிசோதகர்)**

அம்பனை, சுன்னாகம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு கந்தையா அவர்கள் 25.07.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு - கண்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும் சின்னம்மா, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் தருமலிங்கம் (கனடா), மனோரஞ்சிதமலர் (இலங்கை), மனோரஞ்சலிங்கம் (லண்டன்), பூபாலகிருஷ்ணலிங்கம் (ஜேர்மனி), சற்குணேஸ்வரன் ( U.S.A) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மு.நடராஜா (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சிவகௌரிதேவி (கனடா), எலிசபேத், (லண்டன்), மங்களா (ஜேர்மனி), நாதினா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஜினி (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம், முதலாம் வருடம்), றஜீவ் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கஜீவ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), சுஜானி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜனேஸ், ஜனிபர் (லண்டன்), சுபாங்கி (ஜேர்மனி), பானு (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நாகம்மா (பிரான்ஸ்), தேவி (கொழும்பு), செல்லம்மா (கிளை முகாமையாளர்-கைதடி) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பனை,*
*சுன்னாகம் மேற்கு.*
***T.P.0777 474225***
(20725) (32-14-16)

தகவல்:
மு.நடராஜா
(மருமகன் - உடற்கல்வி ஆசிரியர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

## வெஸ்லி சுகேந்திரன் செல்வநாயகம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் சாத்தனை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வெஸ்லி சுகேந்திரன் செல்வநாயகம் அவர்கள் 25.07.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவரும் டேவிட் சுதாகர் (மருத்துவபீட மாணவன் 5ஆம் வருடம், கொழும்பு) அவர்களின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்) தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் ஞானேந்திரன், பாலேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் இரகுநாதன், காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, சத்தியநாதன், பாக்கியலக்ஷ்மி, பரமானந்தம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.07.2003) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சாத்தனை,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(20726) (14-16-32)

தகவல்:
டேவிட் சுதாகர்.




# சித்தமருத்துவ வளர்ச்சிக்கு நிறுவனமாக்குவது நல்லதல்ல

**சித்த மருத்துவத்துறை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் மற்றும் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை தொடர்பாக சித்த மருத்துவ இணைப் பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி எழுதிய ஆக்கம் கடந்த 23ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகியிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் சித்த மருத்துவ பட்டதாரிகள் ஒன்றியம் விடுத்த குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

சித்தமருத்துவத்துறையை நிறுவனமாக்குவதே அதன் வளர்ச்சிக்கு நல்லது என்று சித்த மருத்துவ இணைப் பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி அவர்களால் எழுதப்பட்டு 23.07.2003ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரையில் இடம்பெற்றுள்ள பல முரண்பாடுகளையும், ஒரு பக்கச்சார்பான சில கருத்துக்களையும் பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் சுட்டிக்காட்டவேண்டியது எமது கடமையாகும்.

தென்னிலங்கையில் பெரும்பான்மையான மக்களிடையே இரு சுதேச மருத்துவ நிறுவனங்கள் உள்ளன. அதுபோல, எமக்கும் நிறுவன அந்தஸ்தையே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கமுடியும். வேறு அலகை வழங்கமுடியாது என்பது அவரது கருத்து. அதாவது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சித்த மருத்துவபீடம் என்பதை வழங்க முன்வந்துவிடக்கூடாது என்ற எண்ணம் இக்கூற்றில் தொனிக்கிறது.

இன்னொரு விதத்தில் தென்னிலங்கைப் பெரும்பான்மையினருக்கு அரசு சுதேச மருத்துவ பீட அந்தஸ்தை வழங்கினால்தான், எமக்கும் பீட அந்தஸ்து கிடைக்கும் என்று அவர் மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறார். அதாவது, மாணவர்கள் பீடம் என்ற நியாயமான கோரிக்கையை வைத்துப் போராடுவது சரிதான். ஆனால், முதலில் தென்னிலங்கையில் பீட அந்தஸ்து கிடைத்தபின்தான் எமக்குக் கிடைக்கும் என்றாகிறது.

மேலும், தென்னிலங்கை சுதேச மருத்துவ நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் இற்றைவரை பல பிரச்சினைகளை எதிர்நோக்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மண்ணில் சில அரசியல் பின்னணிகளுக்காக சித்த மருத்துவ நிறுவனம் உருவாக்கப்படுவதை ஒரு சிலர் சுயலாபத்துக்காக ஊக்குவிக்கலாம். ஆனால், வரலாறு இவர்களை மன்னிக்கப்போவதில்லை. வேண்டாம் இந்த விஷப்பரீட்சை. கொழும்பு சுதேச மருத்துவ நிறுவனத்திலிருந்து வளர்ச்சியடையாத நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டோம். ஆதலால் வளர்ச்சி அடைய முற்படுகிறோம். மீண்டும் நிறுவனம் என்ற பெயரில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை தேவைதானா?

பேராசிரியர் தமது கட்டுரையில் இலங்கையில் சுதேச மருத்துவத்துறை இன்னும் தகுந்த வளர்ச்சி பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதாவது தென்னிலங்கையில் பல ஆண்டுகளாக சுதேச மருத்துவ நிறுவனங்கள் செயற்பட்டும் சுதேச மருத்துவம் தகுந்த வளர்ச்சியடையவில்லை என்பதையும் அவரே ஒப்புக்கொள்கிறார்.

ஏனைய பல்கலைக்கழகங்களில் பீடம் அமையும் வரை யாழ். பல்கலைக்கழகத்திலும் சித்த மருத்துவ பீடம் அமையக்கூடாது என்ற தமது விருப்பத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். அவர் தனது சிந்தனைக்கு எட்டியவரை நிறுவனம் என்பதையே பற்றிநிற்கிறார். ஆனால், எமது மண்ணில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு படம்தான் சிறந்தது என்பது தொலை நோக்குடன் சிந்திப்பவர்களுக்குப் புரிகிறது. அதுமட்டுமன்றி, தென்னிந்தியாவில் அண்ணா பல்கலைக்கழத்தின் கீழ் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பாளையங்கோட்டை சித்தமருத்துவக் கல்லூரி அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் செயற்படவில்லை. அது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஒரு சித்த மருத்துவ பீடமாகவே (Faculty of Siddha) செயற்படுகிறது.

நிறுவகம் துணைவேந்தரின் கீழ இயங்கும் ஒரு துறை என்பதை யாரும் மறுத்துக் கூறவில்லை. ஆனால், அந்த நிறுவனத்தை நிர்வகிக்க ஒரு நிர்வாகசபை அமைக்கப்படும் என்பதையிட்டுத்தான் இத்துறை சார்ந்தவர்கள் கவலைப்படுகிறார்கள். ஏனெனில், சித்த மருத்துவத்துறையின் உள்வீட்டு விடயமாக இருந்தாலும் இன்று மக்கள் அரங்கிற்கு கொண்டு வரவேண்டிய நிலை உருவாகிவிட்டது.

எனவேதான், சித்த மருத்துவத் துறையின் உண்மையான வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் தற்போதுள்ள பல்கலைக்கழக நேரடிக் கட்டமைப்பான மூதவை, பேரவை என்பனவற்றின் கீழ் தாம் செயற்பட விரும்புகிறார்கள்.

சித்த மருத்துவத்துறையின் நிர்வாக சபையின் செயற்பாடுகள் பற்றியும், பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதுபோலவே கொழும்பு சுதேச மருத்துவ நிறுவகத்துக்கு ஒதுக்கப்படும் நிதியளவு பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

சித்த மருத்துவத்துறை கொழும்பில் சுதேச மருத்துவ நிறுவனத்தில் இருந்த காலத்தில் சித்தமருத்துவ வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆயுர்வேதத் திணைக்களம் எமது துறை கொழும்பில் இருந்த காலத்திலேயே சித்த மருந்து உற்பத்தி போன்ற பல விடயங்களில் அக்கறை காட்டவில்லை. தற்போது பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு ஊடாக சித்த போதனா வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யும்படி விடப்படும் கோரிக்கைகளுக்குக்கூட ஆயுர்வேத திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் நிர்வாகசபை அமைத்து அதற்கூடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதால் புதிதாக எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

பாரம்பரிய வைத்தியர்களிடையே காணப்படும் விசேட சிகிச்சை முறைகளை சேகரித்து அவற்றை வெளியிடுவதுடன், அவர்களைக் கௌரவிக்க நடவடிக்கை எடுப்பது பற்றி பேராசிரியர் கூறியிருக்கிறார். B.S.M.S. பாடத்திட்டத்தில் பரம்பரை மருத்துவம் என்ற பாடம் 4ஆம், 5ஆம் வருட மாணவர்களுக்கு இருந்தது. பரம்பரை வைத்தியர்களிடமிருந்து அவர்களின் மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பாடம் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழகத்தில் பல பீடங்கள் செயற்படும்போது சித்த மருத்துவபீடம் அமைந்தாலும் சித்தமருத்துவம் பற்றி விரிவாக, விளக்கமாக ஆராய்ந்து செயற்பட சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாகவே இருக்கும் என்ற கூற்றிலும் எவ்வித அர்த்தமும் இல்லை. பல்கலைக்கழகத்தின் மற்றைய பீடங்கள் எவ்விதம் தமக்குரிய இலட்சியத்துடன் முன்னேறுகின்றனவோ அதேபோல சித்த மருத்துவ பீடமும் தனக்குரிய இலட்சியத்துடன் முன்னேறமுடியும்.

ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்துக்குத் தற்போது அவசரக் கோலத்தில் புத்துயிர் ஊட்டப்படுவதன் மர்மதனை சித்த மருத்துவத்துறை சார்ந்தவர்கள் நன்கு அறிந்துள்ளனர். 10 ஆண்டுகளுக்கு முன்னர் தட்டச்சு இயந்திரம் கேட்டவர்கள் தற்போது கணனி இயந்திரம் கேட்கிறார்கள். காலத்துக்கேற்ப மாறுதல் எல்லாவற்றிலும் அவசியம். பல்கலைக்கழக மூதவையும், பேரவையும் 10 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வதற்கு உரிமையுண்டு.

எனவே, பல்கலைக்கழக நிர்வாகம் தனிப்பட்டவர்களின் அதிகாரத்துக்காகவும், சுயலாபத்துக்காகவும் புத்துயிருட்டப்பட்டுள்ள நிறுவனம் என்பதை நிராகரித்து, சித்த மருத்துவ சமூகத்துக்கு எப்போதும் நன்மையளிக்கக்கூடிய சித்த மருத்துவ பீடம் என்பதை அங்கீகரிக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.

## கட்டாக்காலிகளை அழிக்க நடவடிக்கை

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் பிடித்தழிக்கப்படவுள்ளதாக ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இவை அழிக்கப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் அவற்றுக்குரிய வருடாந்த உரிமத் தகட்டைப் பெறுவதுடன் தடுப்பூசிகளை அவற்றுக்கு ஏற்றும்படியும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ஒ-10)

## மக்கள் முகம்



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவி சோபிகா தவராஜா இவ்வாண்டில் (2003) 2ஆவது தடவையாக அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று 10ஆயிரம் ரூபா பணப்பரிசிலும், சான்றிதழும் பெற்றுள்ளார்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியிலேயே சோபிகா தவராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை -

சர்வதேச மகளிர் தினம் தொடர்பாக மகளிர் விவகார அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட (ஆண்டு - 13) கட்டுரைப் போட்டியிலும் இவர் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருதிருமதி தவராஜா - சந்திரிகா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாவார். (எ-185)

★ ★ ★ ★



வேலணை மேற்கு, சிற்பனையைச் சேர்ந்த தியாகராஜா - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வரான பாலச்சந்திரன் அண்மையில் மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பிரபல வர்த்தகரும், சமூகசேவையாளரும், அகில இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், தீவக லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் உறுப்பினரும் சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும், வேலணை முடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, காலி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினரும் ஆவார். (எ)

★ ★ ★ ★



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக என்.ஏ.விமலேந்திரன் அண்மையில் பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்றில் ஆசிரியராக, இடைநிலைக்கல்வி மேற்பார்வையாளராக, உப-அதிபராக, சிரேஷ்ட உப-அதிபராக இவர் பணியாற்றியுள்ளார். (எ-185)

★ ★ ★ ★



தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா தேவராஜா, மல்லாகம் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவரான இவர், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசநியமந்த பணிப்பாளராகவும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஆலோசகராகவும், இணுவில் லயன்ஸ் கழக ஸ்தாபனத் தலைவராகவும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், கொக்குவில் இந்து பழைய மாணவர் சங்கம், தாவடி இந்து பழைய மாணவர் சங்கம், இணுவில் திருவூர் ஒன்றியம் ஆகியவற்றின் உபதலைவராகவும் பணியாற்றி வருகிறார். (எ)

# வாசகர் திருமுகம்

## நிரந்தர பிரதேச செயலர்களை நியமிக்க நடவடிக்கை எடுங்கள்

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகங்களில் நிரந்தர பிரதேச செயலர் பதவிகள் நிரப்பப்படாது வெற்றிடங்களாக இருந்து வருகின்றன. சங்கானையிலுள்ள வலி.மேற்கு பிரதேச செயலகம், சண்டிலிப்பாயிலுள்ள வலி.தென்மேற்கு பிரதேச செயலகம், உடுவிலிலுள்ள வலி.தெற்கு பிரதேச செயலகம், தெல்லிப்பழையிலுள்ள வலி.வடக்கு பிரதேச செயலகம் ஆகிய பிரதேச செயலகங்களில் நிர்வாக உத்தியோகத்தர்கள் அல்லது உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் உதவிப்பிரதேச செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்றைய சூழ்நிலையில் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இனங்கண்டு நிறைவேற்றுவதற்கும், அரசசார்பற்ற வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உதவிகளை பெறுவதற்கும் இப்பிரதேச செயலகங்களில் நிரந்தர பிரதேச செயலர்கள் கடமையாற்ற வேண்டியது மிகவும் அவசியமானது.

ஏதோ, பெயரளவில் நிர்வாகம் நடத்தவேண்டும் என்பதற்காக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரதேச செயலகங்களில் பதில் பிரதேச செயலாளர்களை நியமனம் செய்து நிர்வாகம் நடத்த முற்படுவது பொது மக்களின் நலன்களை பாதிப்பதாகவும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைந்து செயற்படுத்துவதற்குத தடை ஏற்படுத்துவதாகவும் இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஒரு பிரதேச செயலர் பதவி வெற்றிடமானால் ஒரு குறுகிய கால பகுதிக்கு பதில் அதிகாரிகளை நியமிப்பதில் தவறில்லை. ஆனால், பல பிரதேச செயலகங்களில் ஆறுமாதகாலமாகியும் கூட நிரந்தர பிரதேச செயலர்கள் நியமிக்கப்படாமல் இருந்து வருவது பொதுமக்களின் நலன்களைப் பாதிப்பதாகவே இருக்கும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆகவே, மேற்படி பிரதேச செயலகங்களில் நிரந்தர பிரதேச செயலர்களை விரைவில் நியமிக்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து நலன்விரும்பிகளாலும் பொது அமைப்புகளாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சுழிபுரம்.* **- வே.சத்தியமூர்த்தி.**

## மருத்துவர்களின் தவறு

செய்தி ஊடகங்களின் வழியாக சிங்கப்பூர் குடியரசில் சமீபத்தில் இடம்பெற்ற தலையால் ஒட்டிப்பிறந்த சகோதரிகள் மீதான சத்திர சிகிச்சை பற்றிய விவரங்களில் சில குறிப்பிடும்படியான அறிவுசாராத குறைபாடுகள் இருக்கின்றன.

முதலாவதாக, சத்திரசிகிச்சை விற்பன்னர்கள் சிகிச்சைக்கு முன்னைய பரிசோதனை முடிவுகளின் படி 50-50 உயிர் பிழைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாகக் கூறியிருப்பது. உயிர் பிழைக்கும் சந்தர்ப்பம் பூச்சியமாக இருந்தது பின்னர் அனைவருக்கும் தெரிந்தது. சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் அதனைச் சரியாகத் தீர்மானிக்கவில்லை என்பதனை அறியும்படியாயுள்ளது.

இரண்டாவதாக, 50-50 உயிர் பிழைக்கலாம் என்பதனைக் கேட்டு சம்பந்தப்பட்ட பெண்கள் சத்திரசிகிச்சை செய்துகொள்ள முன்வந்தது. உயிர் பிழைப்பதற்கு சாத்தியமேயில்லை என்று கூறியிருந்தால் அவர்கள் மறுத்திருப்பார்கள் என்று உறுதிபடக்கூறலாம். அவர்களின் முடிவிற்கு 50-50 கூற்று காரணமாக அமைந்துவிட்டது.

அடுத்தது, நோயாளிகள் சரி என்றதனாலும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது என்ற சாயலில் செய்திகள் அமைந்திருப்பது. குறையைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்துகொண்ட வல்லுநர்கள்தான் சத்திரசிகிச்சை செய்வது அல்லது செய்யாது விடுவது பற்றிய முடிவை அறிவுபூர்வமாக எடுகக்முடியும். நோயாளிகளைக் கேட்டு வல்லுநர்கள் அதனை மேற்கொள்வது அபத்தமாகும்.

கடைசியாக, சகோதரிகளிற்கு வயது இருபதைத் தாண்டிய நிலையில் மூளைகள் இணைந்துவிட்டிருந்த தன்மையைக் கண்ட பின்பு சத்திரசிகிச்சை தோல்வியைத் தழுவும் என்று உறுதிப்படுத்தப்பட்டது. அதே காரணத்திற்காக இப்படியான வயதெல்லையைத் தாண்டியவர்கள்மேல் சத்திர சிகிச்சை மேற்கொள்ளக்கூடாது என்று ஆரம்பத்திலேயே முடிவெடுக்கத் தவறிவிட்டனர்.

சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் இச்சகோதரிகளிடம் உயிர் பிழைக்கும் சந்தர்ப்பம் சைபர். எனவே, நீங்கள் இச்சிகிச்சையை மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தி அவர்களைத் தாய்நாட்டிற்கு வழியனுப்பியிருத்தல் வேண்டும். மாறாக அவர்கள் செயற்பட்டுவிட்டார்கள் என்று தெரிகின்றது.

வைத்தியர்கள் உயிர்பிழைக்கும் சாத்தியம் பற்றிய முன்கூறலைத் துல்லியமாகத் தீர்மானித்தல் வேண்டும். ஏனோதானோ என்று செய்வது பெருந்தவறாகும். மேலும் வைத்தியர்கள்தான் முடிவுகளை எடுத்தல் வேண்டும்.

*கரவெட்டி.* **- வி. முகுந்தன்.**

## 'நியாப்' திட்டம் குடாநாட்டில் அமுங்கிப்போனதற்கு யார் காரணம்?

2002ஆம் ஆண்டு மிகவும் சிறப்பான வகையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் 40கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப்).

2002ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து இத்திட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றமின்மை,மாவட்ட அரச அதிகாரிகளின் திறமையின்மை, ஊழல், மோசடி, யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் நியாப் திட்டத்திற்கு எதிராகச் சமர்ப்பித்த அறிக்கை என்பன காரணமாக 40 கோடி ரூபா திட்டம் 8 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

போரினால் சிதைவடைந்த ஒரு மாவட்டத்திற்கு பலத்த இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் தாங்கமுடியாத துன்பத்தை அனுபவித்து தற்போது மீளக்குடியமர்ந்துள்ள எங்களைப் போன்ற ஏழைகளுக்கு இருக்கக்கூடிய அடிப்படைத் தேவையான குடிதண்ணீர் பிரச்சினையையாவது நியாப் திட்டம் தீர்த்துவைக்குமா? என நாங்கள் ஏங்கித் தவிக்கும் வேளையில் இடர்பட்ட மக்கள் மேல் இடி வீழ்ந்தால்போல் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதனால், இந்த மாவட்ட மக்களாகிய நாம் மிகவும் கவலையும், வேதனையும் அடைந்துள்ளோம். கிராமமட்ட உத்தியோகத்தர்கள் குழப்பமும் விரக்தியும் அடைந்த நிலையிலுள்ளனர்.

இதற்குக் காரணமாக உலக வங்கி குறிப்பிடும் காரணங்கள் உண்மையா? என்பதை நாம் தெளிவு பெற விரும்புகின்றோம்.எனவே இதற்கு பொறுப்பானவர்கள் என விரல் சுட்டப்படும் யாழ். அரசாங்க அதிபர், நியாப் திட்ட யாழ். மாவட்ட ஆணையாளர், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகள் என்போர் பகிரங்கமாக இது தொடர்பான முழுமையான விடயங்களை அறியத்தர முன்வருவார்களா?

*பாதிக்கப்பட்ட மாவட்ட மக்கள் சார்பில்*
**வாசுதேவன்**

### டிப்ளோமா கற்கை

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை நிலையத்தில் பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# துறையூர் சம்பவம் குறித்து ஆணைக்குழு அதிகாரி விசாரணை

யாழ்ப்பாணம்,ஜூலை26

வேலணை துறையூர் பகுதியில் வைத்து பொதுமக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டமை தொடர்பாக ஈபிடிபி. உறுப்பினர்கள் மற்றும் பொலீஸாரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி விசாரணை நடத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை வேலணை துறையூர் பகுதியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அப்பகுதியிலுள்ள சிலர் கிழித்தெறிந்ததை அடுத்து அப்பகுதிக்கு வந்த ஈபிடிபி. உறுப்பினர்களும், சிவில் உடைதரித்த பொலிஸாரும் மீன் சந்தையில் கூடிநின்ற பொதுமக்களை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், அவர்கள் மீது தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் துறையூர் கடற்றொழிலாளர் சங்கம் இந்த முறைப்பாட்டை செய்திருந்தது.

மேற்படி முறைப்பாட்டை அடுத்து நேற்றுமுன்தினம் அப்பகுதிக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் ஆகியோரிடம் விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளின்போது ஊர்காவற்றுறைப் பொலீஸார் தமக்கும் இச் சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்ததையடுத்து இதுதொடர்பாகப் பொலீஸ் மா அதிபருடன் தொடர்புகொள்ளப்போவதாக ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் தெரிவித்தார். (எ-5)

### யாழ்.பண்ணையில்

# புதிய தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு

யாழ்.பண்ணையிலுள்ள ரெலிக்கொம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் சுமார் 600 அடி உயரம் கொண்ட புதிய தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்பு நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள பகுதியில் இந்த புதிய தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே 500 அடி உயரம் கொண்ட தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)


தமிழினத்தின் உரிமைப் போராட்ட வரலாற்றை விளக்கும்

**புதிய நூல்!**

**என்.சோமகாந்தனின்**

**ஈழத் தமிழர்க்கு ஏன் இந்த வேட்கை?**

கடந்த 40, 50ஆண்டுகளாக எமது மண்ணை இறுகப்பிடித்துள்ள பிரச்சினை தொடர்பாக மக்கள் மத்தியில் இதுவரை எடுத்து விளக்கப்பட்டது போதாது.

இந்நூல் முழுப்போரின் விமர்சிப்பாக அமைகிறது.

- பேராசிரியர் கா.சிவத்தம்பி

இந்நூல் வரலாற்றுப் பின்புலத்து நிகழ்வுகளை ஆழமாக ஆய்ந்து எழுதப்பட்டுள்ளது.

- திரு.வி.ரி.தமிழ்மாறன் முதுநிலை விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடம்.

பக்கங்கள் 172 விலை ரூபா 200

கிடைக்கும் இடம்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-29132) (21-12-13)


# செஞ்சிலுவைக் குழுவுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை26

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் வேண்டப்பட்டுள்ளனர்.

திருமதி பரம்சோதி உதயா, உடுவில் கிராமசபை அகதிகள் முகாம், மருதனார்மடம், சுன்னாகம்.

திருமதி யூட் மரியபீரிடா, கற்குளம் வீதி, நாவாந்துறை (கொட்டடி), யாழ்ப்பாணம்.

திருமதி அருளப்பு மேரிஅனிற்றா, F-9, குருநகர் தொடர்மாடி, யாழ்ப்பாணம்.

திருமதி செல்வம் குணம், 5, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.

திருமதி நடராஜா லூர்த்தம்மா, இணுவில் கிழக்கு, இணுவில்.

திருமதி கந்தையா சின்னப்பிள்ளை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (ஒ)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

யாழ். மாவட்ட கிராமசேவையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் எஸ்.ஞானவேல் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-5)


## அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் 27.07.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடத்தப்படவிருந்த 81 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா நடைபெறமாட்டாது என்பதை சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், 2ஆம் மாடி. (29131)(21-13-12) யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.


### குளம் புனரமைப்பு

பளைப் பிரதேசத்திலுள்ள தம்பகாமம் குளம் பளை கமநல சேவைகள் நிலையத்தினால் உலக வங்கியின் உலக உணவுத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

இக்குளம் இப்பகுதி மக்களின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

### கொழும்புத்துறை கிழக்கு பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்க கோரிக்கை

அரியாலை,ஜூலை26

கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கு மின்சார விநியோகத்தை வழங்குமாறு கொழும்புத்துறை சனசமூக நிலையம் இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும், இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை. இதனால், இப்பிரதேச மக்கள் இரவு நேரங்களில் இருளில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று சனசமூக நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மின்சாரம் இல்லாததை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் இப்பகுதியில் தீவிரமாகச் செயற்படுவதாகவும் நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சனசமூக நிலையம் இந்து கலாசார அமைச்சுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-17)


## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை மின்சார சபையில் 25.07.2003 இல் தமது 32 வருட சேவையைப் பூர்த்திசெய்த மாகாண அபிவிருத்திப் பொறியியலாளர்



உயர்திரு. வி.வேலுப்பிள்ளை (B.Sc.MIEE)

கடமையையே பெரிதென மதித்து நடந்த கனவான்

கடமைபுரியும் காலத்தில் அனுராதபுரத்தில் அரக்கர்களின் கோரப்பிடியிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் ஆண்டவனால் தமக்கு தரப்பட்ட உன்னத பணியைத் தளராது செய்துமுடித்து நேற்றைய தினத்தில் அகவை அறுபதை அடைந்த உத்தமன்.

**திரு.வி.வேலுப்பிள்ளை அவர்களை**

மனதார அகமிக மகிழ்ந்து வாழ்த்துவதற்கு அரியதொரு சந்தர்ப்பத்தை வழங்கிய செல்லப்பிள்ளையாருக்குத் தலை வணங்கி, அவர்களும் அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் புகழுடன் வாழ்க வாழ்கவென்று நெஞ்சார வாழ்த்தி நிற்கும் -

(20720) (21-12-13-25) K.M.K.குடும்பம்.



## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இலங்கை மின்சார சபையில் மாகாண வழங்கல் கட்டமைப்பு பொறியியலாளராகக் கடமையாற்றும்

**திரு.வி.வேலுப்பிள்ளை** (B.Sc., MIEE)

அவர்கள் 25-07-2003 அன்று தனது 60ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியுள்ளார். அவரை பல சிறப்புக்களும், சுகமும் பெற்று நீடுழி வாழ்கவென உளமார நாமும் வாழ்த்துகின்றோம்.

மின் அத்தியட்சகர், ஊழியர்கள்.

மி.பா.சே.நிலையம், இ.மி.ச. பருத்தித்துறை.

(20715)(21-12-13))



### விற்பனையாளர் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் தேவை, மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

றொலக்ஸ் பேக் மாட், 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(21-25-13-12) (20710)



வில்லூன்றி புனித தீர்த்தம்

## ஆடி அமாவாசைப் பெருவிழா

28-07-2003 திங்கட்கிழமை

✪ தீர்த்தோற்சவம்

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை

காலை 8.00 மணி தீர்த்த வாரி

காலை 8.30 மணி முதல் 10 மணி வரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகம்

காலை 10 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

✪ பிதிர்க்கடன்கள்

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்

(20713) பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம் (21-12-13)



உ

ஸ்ரீராம ஜெயம்

## இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 09 1953

உதிர்வு 25 07 1983



அமரர் செல்வன் **கந்தப்பு தருமகுலசிங்கம் (ஜெயம்)**

(புலோலி ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிலைய முன்னாள் ஊழியர்)

ஆண்டுகள் இருபதானாலும் ஆறுமோ!

எம்மனம்? இனியவனே!! ஜெயமே!!!

உன்நாமம் நிலைக்க உருவாக்கினோம்

ஜெயகணேசாவை நித்தம் நினைக்க!

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை. (20719)(21-2712-13)

என்றும் மறவா அன்புடன்: அம்மா, அக்கா, சகோதரர்கள், உறவினர்கள்.



### விற்பனைக்கு

வீட்டுப்பாவனைப் பொருள்களும் (இரண்டு இரும்பு அலுமாரிகள்), 25 வருட முதுமைவாய்ந்த வேம்பு இரண்டும் விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம்:

ஞாயிறு காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தொடர்பு: 53. மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

(20714) (21-12-13)



### வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி நகரப்பகுதிக்குள் மென்கொங்கிறீற் சீற் தயாரிக்கும் HDL-HUDEC MCR PROJECT நிறுவனத்துக்கு 2 பரப்புக்காணி / காணியுடன் வீடு, உடன் வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு:

இல.14, மத்தியூஸ் வீதி, திரோதுபாதை, யாழ்ப்பாணம்.

☎ 021 222 3877

(திங்கள் முதல் சனிவரை காலை 8 முதல் மாலை 4 வரை)

(20711) (25-24-1-15)



## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்.பிரதேச செயலகத்தின் ஒய்வூதியக் கிளையின் பிரதம எழுதுநர்

திருமதி சரோஜினிதேவி இரவீந்திரன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா**

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் - அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச்சங்கம், யாழ்.பிரதேச செயலகம். (20716)(21-13-12)

**நாகம்ஸ் சுன்னாகம்**

அர்ஜூன், கிரண், கவுண்டமணி நடித்த

(திகில்)

தினசரி காட்சி : 11.00, 3.00, (பு.நே.)
இரவு: 7.00 (பு.நே.)

(C28767) (31-14-16)

**லக்ஷ்மி சினிமா**
இணுவில்

சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த

**பாறை**

காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பு.நே.)

(C/28976) (31-14-16)



# இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நடைபெறுகின்ற பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு
சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**செல்வி மீரா கணேஸ்வரன்**
**செல்வி நிலானி கணேஸ்வரன்**

இருவரும் பரதக்கலையில் சிறப்புடன் திகழ எமது நல்வாழ்த்துக்கள்!

வாழ்த்துக் கூறுவோர் :

**DENSHI**

(20734)(14-16)

Video, Photo & Digital Vision(pvt) Ltd.

146,2/1 ,Galle Rd.,
Wellawatha,Co.06.
☏ 01 504224
Hot Line 078 657317

DENSHI DIGITAL VISION
K.K.S.Road, Inuvil.
☏ 0777 743873
071 2322082



**எமது வாடிக்கையாளர்களுக்கு**

★PANASONIC ★ SANYO ★ BPL T.V களை இரண்டு (2) வருட உத்தரவாதத்துடனும் ★LG ★SISIL குளிர்சாதனப்பெட்டிகளை ஐந்து (5) வருட உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

SONY Radio
SONY TV
NATIONAL Radio, Radio Cassatte, Vedio Deck முதலியனவற்றையும் சகலவித மின்சார வீட்டுப்பாவனைப்பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும் சிறந்தமுறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டியது

உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்

**V.K. இராசரத்தினம்**
95,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(20731) (32-14-16-17)


## இலங்கையைச் சேர்ந்த போலி டாக்டர் கனடாவில் கைது!

டொரன்டோ,ஜூலை26

கனடா, ஸ்காபுரோ விக்டோரியா பார்க் வீதியில் உள்ள மருத்துவ நிலையம் ஒன்றில் பணியாற்றிய போலி மருத்துவரான இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

'டொரான்டோ சண்' என்னும் பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியின்படி இது பற்றிய விவரம் வருமாறு:-

சந்தேக நபரான தபோதரன் விஸவநாதன் (வயது 29) மருத்துவராகப் பணியாற்றுவதற்குத் தேவையான பயிற்சியும் கல்வித் தகைமையும் தன்னிடம் இருப்பதாகக் கூறியதையடுத்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டார். இரண்டு வாரங்கள் பணியாற்றிய அவர் சுமார் 30 நோயாளிகளைப பார்வையிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். போலி பத்திரங்களைச் சமர்ப்பித்தது உட்பட 10இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பொலீஸார் அவர் மீது சுமத்தியிருக்கின்றனர்.


**நிறைஞ்சனா**

பாடசாலை மாணவர்கள் பெரியோர்கள் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
கரண், குஷ்பு நடித்த

**ஸ்ரீ பண்ணாரி அம்மன்** (திகில்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

**THE ART OF THE WAR**
தினசரி 8.45 இரவு.

(C28977) (31-14 (8)

**ராஜா யாழ்ப்பாணம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு

மாதவன், ஜோதிகா நடித்த


**பிரியமான தோழி** (திகில்)

தினசரி: 10.30,2.30,6.30,9.30.

(C28821) (31-14-16)

**லிபேட்டி அச்சுவேலி**

நாளை மட்டும்
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ரா நடித்த



**தமிழன்** (திகில்)
தினசரி காட்சிகள்
3.00, 7.00 (புதிய நேரம்)

காலை 11.00 மணிக்கு **THE WORLD IS NOT ENOUGH** (திகில்)

(C/28688) (31-14-16) (007 ஜேம்ஸ் பாண்ட்).



# வாழ்த்தி மகிழ்கின்றோம்



**செல்விகள்**
**மீரா கணேஸ்வரன், நிலானி கணேஸ்வரன்**

ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற அனைய எல்லாம்வல்ல இறைவனின் அருள் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

அழகராசா உமாதேவி குடும்பத்தினர்

கோண்டாவில்

சந்திரமூர்த்தி இரத்தினகாந்தி குடும்பத்தினர்.

கொக்குவில்.

(20739) (32-14-16)


# மின்சார சபை ஊழியர்கள் 30ஆம் திகதி வேலை நிறுத்தம்.

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த 29 தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்வதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சம்பள மறுசீரமைப்பின்படி வழங்க வேண்டிய சம்பள நிலுவையை வழங்கக்கோரியே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த வேலை நிறுத்தத்தினால் 30ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் மறுநாள் நண்பகல் 12 மணி வரை மின்சார விநியோகம் பெரும்பாலும் தடைப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தவறுதலான துப்பாக்கி வேட்டில் போராளி சாவு

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான துப்பாக்கிப்பிரயோகச் சம்பவத்தில் போராளி ஒருவர் சாவடைந்தார் என்று புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

வீரவேங்கை புரட்சி மாறன் (செபமாலை அன்ரன் தினேஸ்வரன், வேளாங்கண்ணி மாதா கோவிலடி கரியபோட்டை, (முருங்கன்,மன்னார்)என்ற போராளியே சாவடைந்தவராவார். (ஐ-4)

**பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது**

இன்று (26.07.2003) நடைபெறவிருந்த விசேட 2ஆவது புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 29.07.2003 செவ்வாய்க்கிழமை பி.ப. 4மணிக்கு நடைபெறும்.

**சயன்ஸ்அக்கடமி, நல்லூர்.**

(29144)(14-16-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரட்ணம் அற்புதமணி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரட்ணம் அற்புதமணி நேற்று (25.07.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா சிவபாக்கியத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்தியலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் வனிதமலர், சந்திரமலர், பாலரட்ணம், நவரட்ணம், சற்குணரட்ணம் ஆகியோரின அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் செல்வராசா, வரதராசா, சரோசா, ஜெகதீஸ்வரி, குமுதினி ஆகியோரின் மாமியாரும் உமாகாந்தன், சோமகாந்தன், சிவாயினி, ராஜினி, வினோதினி, கஜேந்தினி, சிவசத்தி, லவகீசன், சர்மிலன், சாரங்கன், சாமந்திகா, தர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2003) சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*விலாசம்:*
*No.158, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(20743)(14-16-17)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா நேற்று (25.07.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் விக்னேஸ்வரன் (கைதடி), மயில்வாகனம் (கனடா), சறோஜினிதேவி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சாரதாதேவி (கனடா), நல்லைநாதன் (கனடா), சத்தியாதேவி (ஆசிரியர் - வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயமலர், கலாஜோதி (கனடா), காலஞ்சென்ற இரவீந்திரன் (ஆசிரியர்) மற்றும் நித்தியானந்தன் (கனடா), நாகபூபதி (கனடா),நந்தசேனா (I.S.A.,வவுனியா) ஆகியோரின் மாமியாரும் அருளானந்தன், விஜிதா, கௌதமகுமார், சுஜிதா, நிதூஷன், அனித்தா, அமுதா, முகுந்தன், இரகுலன், இரகுலினி, சிந்துஜன், செலீனா, சுமன், சுதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2003) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29, செட்டித்தெரு லேன்,*
*நல்லூர்.*

(20738) (29-17-14-16).

தகவல்:
விக்னேஸ்வரனும்
சகோதரர்களும்.

## திருமதி சின்னம்மா அப்புத்துரை (கமலம்)

சுதுமலை வடக்கு, கண்ணிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா அப்புத்துரை (கமலம்) அவர்கள் 24.07.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவியும் சந்திரகாந்தி (லண்டன்), சந்திரநிவாசன் (லண்டன்), சந்திரமாதேவி (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் (லண்டன்), Dr.சுஜாதா (லண்டன்), சாமினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, விமலநாயகி, தனபாலசிங்கம், நாகேஸ்வரி, கோமளம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகபூரணம் சந்திரலிங்கம், தனலட்சுமி, யோகராசா காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் சசாங்கன், சந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் நாளை (27.07.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணிதோட்டம்,*
*சுதுமலை வடக்கு.*

(20737)

தகவல்:
பிள்ளைகள்.

# கடத்திய வாகனங்களுடன் கடத்தல் கும்பல் கைது!

கடத்தப்பட்ட ஆறு வான்கள்,ஒரு ஓட்டோ ஆகியவற்றுடன் கடத்தல் கும்பலைச் சேர்ந்த ஐந்து நபர்கள் கோட்டை பொலஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். அவர்களால் நடத்தப்பட்டு வந்த போலி அத்தாட்சிகள் அச்சடிக்கும் நிலையமொன்றும் பொறளையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் கடத்திச் செல்லப்பட்ட வானொன்றை கண்டுபிடிக்க மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே மேலும் ஐந்து வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கோட்டை குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகத்தபால தலைமையில் சென்ற பொலஸ் கோஷ்டியினரே டெடிகம பகுதியில் வைத்து இந்த வாகனங்களை மீட்டுள்ளனர்.

பொறளையில் நீண்ட காலமாக நடந்துவந்த வாகனங்களுக்கு போலி அத்தாட்சிப்பத்திரங்கள் தயாரிக்கும் நிலையமொன்றிலிருந்து கணினிகள் மற்றும் பெருந்தொகை யான போலிப் பத்திரங்களும் மீட் கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் வாகனங்களைக் கடத்தி, போலி அத்தாட்சிப் பத்திரங் களுடன் விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## காணி,வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

உத்தேச நிர்வாக அலகு தொடர்பான ஆவணம் குறித்து அரசும் புலிகளும் எதிர்காலத்தில் பேச்சு நடத்தும்போது சம்பந்தப்பட்ட அலகுக்கு தற்போது மட்டுப்படுத்தலுடன் வழங்கப்பட்ட அதிகாரங்களை விட மேலதிகமான அதிகாரங்களை வழங்கும்படி புலிகள் வற்புறுத்தலாம் என்று அரசு எதிர்பார்ப்பதாகக் கருதப்படுகின்றது.

அத்தகைய நிலைமை ஏற்பட்டு அதற்கு அரசு இசையும் சூழநிலை உருவானால், அதற்கமைய ஆவணத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் அரசுக்கு நேரும்.

அத்தகைய அடிப்படை மாற்றங்களை, அந்தக் கட்டத்தில் ஜனாதிபதி குமாரதுங்க கடுமையாக எதிர்த்தால், நிலைமை மோசமாகும் என அரசு முன்கூட்டியே கருதியதாகக் கூறப்படுகிறது.

அத்தகைய நெருக்கடி பின்னால் ஏற்படுவதைத் தவிர்க்கும் முன் ஆயத்த ஏற்பாடாகவே உத்தேச நிர்வாக அலகுக்கு மட்டுப்படுத்தப்படாத அதிகாரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கும் வடிவத்திலான ஆவணத்தை ஜனாதிபதிக்கு அரசுத்தரப்பு அனுப்பி வைத்திருந்தது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

எமது இன்றைய புதிய வீடியோ, CD வெளியீடு
★ "ஆஹா எத்தனை அழகு"
(ரகன் CD)
பிரதிகள் உடன் பெறலாம்
நிதர்ஷன் வீடியோ
ஏழாலை தெற்கு,
(32) மயிலங்காடு. (20741)
T.P.No-0777-178155
0777-964913

புதிய வீடியோ CD வெளியீடு
★ ஆஹா எத்தனை அழகு
சோலை வீடியோ
விஷன்
நெல்லியடி.
(32) (C29142)

SUBRA
சித்துன்கேணி
O/L PAPER CLASS
தினமும் மாலை
6-7 மணிவரை துரித
மீட்டலும் வினாவிடையும்
★ அனுமதிக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்.
★ வெளிமாணவர்களும் பங்கு கொள்ளலாம்.
★ அனுமதிகள் வரையறுக்கப்படவை. (C/29076) (12-)
மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெறலாம்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் சா.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கோண்டாவில் ப.நெ.வ.அ.கூ.சங்க பொதுமுகாமையாளர் பொ.ஜேசுராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-4)

## கண்காணிப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோக பூர்வமாக அறிவித்துள்ளதாகக் குழுவின் பேச்சாளர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று மாலை இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுத் தலைவர் இவ்வாரம் நேர்வே செல்லவுள்ளார் என்றும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் மேலும் கூறினார். (ஐ)

## கனிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் நாளையும் நேரில் விஜயம் செய்யும் இக்குழுவினர், மணற்காட் டின் மண்வளம், அங்கு எவ்வளவு ஆழத்திற்கு மணல் அகழ்வை மேற் கொள்ளலாம் என்பன பற்றி ஆராய் வர்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சிவசுவாமி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ப.வேலாயுதபிள்ளை மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள துறை சார்ந்த சிரேஷ்ட பொறியியலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் குழுவினர் நடத்தவுள்ளனர். (ஐ-5)

புதிய வீடியோ CD வெளியீடு
★ ஆஹா எத்தனை அழகு
CDகளும் பிரதிகளும் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
(கோண்டாவில்)
(C29141)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்
A/L DAYCLASS
நடைபெறுகின்றன.
வர்த்தகப் பிரிவு
திங்கள், புதன் 8 - 12.30 வரை
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - முரளி
கலைப்பிரிவு
சனி - ஞாயிறு மட்டும்
குறிப்பு:- 9 - 1.30 வரை.
(C-29111)(12)
இணுவில்
பொருளியற் கல்லூரியில்
வர்த்தகப் பிரிவு
திங்கள்,புதன் 8.00-12.30 வரை
நடைபெறுகின்றன.

## கலைஞர்கள் கௌரவிப்பு

மட்டக்களப்பு,ஜூலை26

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச்சேர்ந்த இசைக் கலைஞர்கள் சிலரைக் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான் கௌரவித்திருக்கிறார்.

மட்டு - அம்பாறை மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் ஏஸ். ரி.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பாடகர்களான எஸ். ஞானப்பிரகாசம்,திருமதி கலைவாணி, சி.தமிழரசி, ஜீவிதா, வாத்தியக் கலைஞரான கே.ரெஜி ஆகியோரே கௌரவிக்கப் பட்டவர்களா வர்.

(ஐ-4)

## 'கோபுரம்' வெளிவந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை26

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் வெளியீடான 'கோபுரம்' இதழின் ஜூன்மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் இரண்டாவது உலக இந்து மாநாட்டுச் செய்திகள், ஆன்மீகக் கட்டுரைகள் மற்றும் திணைக்களத் செய்திகள் என்பன இடம்பெற்றுள்ளன.

இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 6ரூபா பெறுமதியான முத்திரையுடன் கடிதத்தலைப்பில் தமது முகவரியையும் குறிப்பிட்டு பணிப்பாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 2481.'. 1 காலி வீதி, கொழும்பு - 4 எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் 'கோபுரம்' -2003 எனக் குறிப்பிடல் வேண்டும் எனவும் - திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள் ளார்.

(எ-10)

## ஈச்சமோட்டையில் திருமஞ்ச திருவீதியுலா

அரியாலை,ஜூலை26

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் திருமஞ்சத் திருவீதியுலா இன்று மாலை 4மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த திருமஞ்ச வீதியுலா ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி விதானையார் வீதி, ஈச்சமோட்டை வீதி, பழைய பூங்காவீதி, கொழும்புத்துறை வீதி, புங்கன்குளம் வீதியூடாக ஈச்ச மோட்டை வீதியை சென்றடைந்து அங்கிருந்து இரவு 10மணிக்கு ஆலயத்தைச் சென்றடையும்.

மறுநாள் காலைபிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்று நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

(எ-17)

LOGIC
A/L 2005 அனுமானம்
Sat.,Sun. 2 p.m.
P. கமல்
(20696)(12)
மதுபாரத் ஆத்திசூடிவீதி.

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி
A/L DAY CLASS
கலை, வர்த்தகம்
நாளை ஆரம்பம்:27-07-2003
பி.ப.1 மணி
யாழ்.நகர் ஆசிரியர் குழு
பொருளியல்:- வரதராஜன்
வர்த்தகம்:- பசில்
கணக்கியல்:- சயந்தன், யூட்
வணிக புள்ளிவிவரவியல்:- தவசேகர்
தமிழ்:- தர்மராஜா
இந்துநாகரிகம்:- பத்மராஜா
அளவையியல்:- கணேஸ்
புவியியல்:- கிரிதரன்
நாடகமும் அரங்கியலும்:- லக்சி
ஆங்கிலம்:- ஜெயக்குமார்
NOTE:-
(1) [illegible]
(2) 27/7/2003 [illegible] A/L Day [illegible]
(3) 2004, 2005 A/L [illegible] 4.30 p.m, 3.30p.m [illegible]
★★ GAQ, BA புதிய பிரிவுகள் ஆரம்பம்
(C29138) (32)

## இந்தியா - இலங்கை வெளியுறவு செயலாளர்கள் சந்திப்பு

புதுடில்லி,ஜூலை26

வெளியுறவு அமைச்சின் செயலாளர் நிகால் றொஸ் றிக்கோ இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று இந்திய வெளியுறவுத் துறைச்செயலாளர் கனபால் சிபலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடிப்பது தொடர்பான பிரச்சினைகள் மற்றும இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் விவகாரம் போன்ற விடயங்கள் குறித்து பேச்சுக்களில் ஆராயப்பட்டதாக கூறப்பட்டது. அத்துடன் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## மாகாண தமிழ்த்தின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ ஜெ. வைஷ்ணவி - இசை (தனி) பிரிவு - IV, இரண்டாம் இடம் (மானிப்பாய் மெமோறியல்).

★ ம.தயாபரன் - இசை (தனி) பிரிவு - V, முதலாம் இடம் (யாழ். மத்திய கல்லூரி).

★ சங்கானை சிவப்பிரகாசம் ம.வி. - இசை (குழு) பிரிவு - VII முதலாம் இடம்.

★ பா.யஸ்திகா - நடனம் (தனி) பிரிவு - I, மூன்றாம் இடம் (ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.).

★ தே.விதுர்ஷன் - நடனம் (தனி) பிரிவு - II, முதலாம் இடம் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

★ பா. அனுசன் - நடனம் (தனி) பிரிவு - III, இரண்டாம் இடம் (பெரியபுலம் ம.வி).

★ கு.மயூரி - நடனம் (தனி) பிரிவு - IV, முதலாம் இடம் (வேம்படி மகளிர் கல்லூரி).

★ எலிசபேத் சுபத்திரா - நடனம் (தனி) பிரிவு - V, முதலாம் இடம் (வேம்படி மகளிர் கல்லூரி).

★ மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி - நாட்டிய நாடகம் பிரிவு - VIII, முதலாம் இடம்.

★ சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி - நாடகம் பிரிவு - VIII, இரண்டாம் இடம்.

★ யாழ்ப்பாணக் கல்லூரி - வில்லுப்பாட்டு பிரிவு - VIII, முதலாம் இடம்.

★ சி.அபயன் - வீணை பிரிவு - II, இரண்டாம் இடம் (யாழ். இந்துக் கல்லூரி).

★ உ. சகானா - வீணை பிரிவு - III, முதலாம் இடம் (உடுவில் மகளிர் கல்லூரி).

★ தி.காயத்திரி - வீணை பிரிவு- IV, முதலாம் இடம் (உடுவில் ம.வி.).

★ பா. கஸ்தூரி - வீணை பிரிவு - V, முதலாம் இடம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

★ கெ.ஹம்ஸவதி - வயலின் பிரிவு - II, மூன்றாம் இடம் (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

★ இ.ஜெயகிருஷ்ணன் - வயலின் - பிரிவு III, மூன்றாம் இடம் (யாழ்.. இந்துக் கல்லூரி).

★ ஜெ.வைஷ்ணவி - வயலின் - பிரிவு IV, இரண்டாம் இடம் (மானிப்பாய் மெமோறியல்).

★ க.பிரார்த்தனா - வயலின் பிரிவு V, இரண்டாம் இடம் (உடுவில் மகளிர் கல்லூரி).

★ ச.விஜயருக்ஷாயினி - புல்லாங்குழல் - பிரிவு - III, முதலாம் இடம் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி).

★ பா. ஐங்கரன் - புல்லாங்குழல் பிரிவு - IV முதலாம் இடம் (ஹாட்லிக் கல்லூரி).

★ த.தனேந்தினி - புல்லாங்குழல் பிரிவு - V, முதலாம் இடம் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி).

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L DAYCLASS
BIOLOGY
"உயிர் பல்வகைமை மீட்டல் வினாவிடை"
By:நாகநாதன்
ஆரம்பம்:
28.07.2003 10.00 a.m.
PHYSICS
திரு.ஜெயசீலன்
திரு.பிரபா
MATHS
திரு.ராஜன்
CHEMISTRY
"அசேதன இரசாயன வினாவிடை"
By:அன்பழகன்
(20642)(12-14-17)

BIT மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல்
BIT கல்வியாண்டு 2003/2004 இற்கான தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை (27.07.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் BIT கற்கை நெறியினை பயிலவிருக்கும் அனைத்து மாணவர்களும் இதில் இணைந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.
(C29140) (32)

வேலை வாய்ப்பு
பிரபல கணனி அச்சகம் ஒன்றில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன
1.முகாமையாளர் (30 வயதுக்கு மேற்பட்ட ஆண்)
2.ஓவ்செற் இயந்திரப் பயிலுநர் (ஆண்)
3.ஸ்கிறீன் பிறின்டிங் பயிலுநர் (பெண்) (முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
4.ஒருங்கிணைப்பாளர் (ஆண்)
பணிக்கு தகுதி உடையோர் 28.07.2003 திங்கள் காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்
51, இலுப்பையடிச்சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஆஹா எத்தனை அழகு
வீடியோ விமல
யாழ்ப்பாணம்
(20720)

இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு அம்பிகா அம்மா





மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
ஒவ்வொரு நாளும் சாத்திரம் சொல்லப்படும்
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(20545)(14-17)

## அறிவித்தல்

அனைத்து மருத்துவபீட மாணவர்களுக்கான மருத்துவபீட மாணவ ஒன்றிய பொதுக்கூட்டம் இன்று (26.07.2003) காலை 8.00 மணிக்கு பல்கலைக்கழக வீரவுரை மண்டபத்தில் நடைபெறும்.

சகல மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(20742) (32-14-17) மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.